திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

OFFICE OF THE STATE EDITOR
109/ ... /71
15 NOV 1971
GAZETTEER ... MADRAS
151

வில்லேந்திய வேலவர்

மாலை 14	விரோதிகிருது - ஐப்பசி - நவம் 1971	மணி 2

தமிழ் நாடு அரசின் அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் முதல் மாநிலமாநாடு, திருப்பரங் குன்றத்தில் நிகழ்ந்த போது, தவத்திரு குன்றக்குடி அடிகளார், M.L.C. மாண்புமிகு அறநிலைய அமைச்சர், அறநிலைய ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தல் (12—9—71)

பொருளடக்கம்

(1) திருமுறைகளில் திருமுருகன்

(2) தொண்டரடிப் பொடி யாழ்வார் அருளிய திருமாலை

(3) டாக்டர் திரு. கலைஞர் பேருரை

(4) பிள்ளையுலகாசிரியர்

(5) வடக்குத் திருவீதிப் பிள்ளை வைபவம்

(6) மகாபாரதம்

(7) தமிழ் அருச்சனை

(8) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலர்கள் சங்கமுதல் மாநில மாநாடு

(9) அறநிலையத் துறையின் மாநில ஆலோசகர் குழுக்கூட்டம்

(10) சமயச் சான்றோர்களின் தமிழ்ப் பற்று

(11) செய்தித் திரட்டு

(12) ஐப்பசிச் சதய விழா

(13) இராச ராசனின் இணையற்ற தியாகம்

(14) சென்ன பட்டணத்துச் சட்டம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. பத்து மட்டும் **தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்**

'**திருக்கோயில்**' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "**திரு. ஆணையர் அவர்கள்**, அறநிலைய ஆட்சித்துறை, **சென்னை-34**" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவிருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.—

— ஆசிரியர்



OFFICE OF THE S... 15 NOV 1971 GAZETTE ... MADRAS-5

மாலை 14] விரோதிகிருது — ஐப்பசி — நவம்பர் 1971 [மணி 2

திருமுறைகளில் திருமுருகன்*

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியின் கண் விளங்கி வளர்ந்து வரும் இலக்கியங்கள் பலதிறப்பட்டனவாம். அவற்றுள் பல்லாற்ரு னும் மிகச்சிறப்பும் பெருமையும் பெற்றுத் திகழ்வன 'திருமுறைகள்' ஆகும். சுவடிகள்' புத்தகங்கள், நூல்கள், இலக்கியங்கள் என்பன போன்ற பெயர்களால் குறிப்பிடப்பெருமல், 'திருமுறைகள்' என்ற தனிப்பெரும் சிறப் புடைய பெயரால் வழங்கப்பெற்று வருதல் தானே, திருமுறைகளின் ஒப்புயர்வற்ற சிறப்பினைப் புலப்படுத்தும். ஒரு நாடும் சமுதாயமும் ஓங்கி உயர்ந்த நிலையில் செழித் திருக்கும்போதே, சிறந்த இலக்கியங்கள்

* சென்னைத் தேனும்பேட்டைப் பாலசுப்பிரமணிய சுவாமிகோயிலில், தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் நடைபெற்ற, மாத வழி பாட்டுக் கூட்டத்தில் அறநிலைய ஆணையரின் நேர்முக உதவியர் திரு. கே. இராஜா, B.A., B.L, அவர்கள் தலைமை யில், தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர் கள் பணித்தருளியபடி, ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. (26–9–71). இக் கட்டுரை கந்தர்சட்டி விழாவினை முன்னிட்டு இங்கு வெளியிடப் பெறுகின்றது.

தோன்றி வளர இயலும் என்பது அறிஞர்கள் அனைவரும் கண்ட உண்மை. திருமுறைகள் ஆகிய தெய்விக இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த காலம், நமது தமிழக வரலாற்றிலேயே மிகமிகச் சிறந்த பொற்காலம் ஆகும். இப் பொற்காலத்தில்தான், ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதரித்து, நமது தமிழகத்தைத் 'தெய்விக உலகமாக்கினர். அவர்களின் 'பாததூளிபடுதலால் இவ்வுலகம் பாக்கியம்' செய்ததாயிற்று.

148691.

திருமுறைகள் :

திருமுறைகளின் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல. அவற்றை ஒரு வகையில் இந்நாளைய பேச்சு வழக்கிற்கேற்பச் சிறந்த "புரட்சி இலக்கியங்கள்" என்றும் "மறுமலர்ச்சி இலக்கியங்கள்" என்றும் குறிப்பிடுதல் பொருந்தும். தமிழகத்தின் சமுதாய வாழ்வில் அக்காலத்தில் படிந்திருந்த பல்வேறு குற்றங் குறைகளைக் கடிந்து களைந்து ஒழித்து, நம் தமிழகத்தில் கி. பி. 300 முதல் 600 வரையில் இடையிற் புகுந்து நின்ற, இழிந்த பல தீய வேற்றுக் கொள்கைகள், பழக்க வழக்கப் பண்பாடுகள் முதலியவற்றை மாற்றியமைத்து, நம்மைச் 'செயல் நன்றாகத்' திருத்தித் தெய்விக அருள்நெறியில் செலுத்தி உய்வித்த, மாபெரும் புரட்சி இலக்கியங்கள் திருமுறைகளே என்றால், அது மிகையாகாது.

திருமுறைகள், நமது தமிழ் மொழியிற் புதிய இலக்கிய வகைகளையும், மரபுகளையும், கவிதை நடைகளையும், கருத்துக்களையும், தோற்றுவித்துப் பெருநலம் புரிந்துள்ளன. நம் பண்டைய முன்னோர்களின் கடவுட் கொள்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்த்தன; நமது கலை நாகரிகம் பண்பாடு முதலியவற்றிற்கு அரண்செய்து, அவை தழைத்தோங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்தன. நமது தமிழகத்தின் வரலாற்றியல், வாழ்வியல், நாடுநகர அமைப்பியல் முதலிய பல்வேறு செய்திகளை ஆராய்ந்து அறிந்து கொள்ளுதற்குத் 'திருமுறைகள்' பெருந்துணை புரிந்து வருகின்றன. அவற்றை ஓதி உணருந்தோறும், நாம் பெற்று மகிழும் ஆன்ம அருளநுபவ நலங்களுக்கு எல்லையே இல்லை. வேறுபிற இலக்கியங்களில் காணப்படாத இணையற்ற இறையருள் இன்பநலத்தின் திறனை, நாம் நம் திருமுறைகளில் காணலாம். திருமுறைகள் நமது இம்மை வாழ்விற்கும், மறுமை நலத்திற்கும் ஏற்ற இனிய துணையாக இலங்கி வருகின்றன.

திருமுறைகளின் சிறப்பு :

இன்று தமிழகம் முழுவதிலும் விண்ணளாவி உயர்ந்தோங்கி விளங்கும் வியன்பெறும் கோபுரங்களை உடையனவாகத் திகழும் எண்ணற்ற பல கோயில்களும், அவற்றைச் சார்ந்த எத்தனையோ பலபல நலங்களும் தோன்றி வளர்வதற்குத் திருமுறைகளே காரணமாகும். திருமுறைகளில் எங்கேனும் ஒரு சிறிய தொடரிற் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அங்ஙனம் குறிக்கப்பெற்ற சிற்றூரும் சிறுகோயிலுங்கூட, மிக்கபுனிதமும் சிறப்பும் உடையனவாக, இன்றளவும் பல நூற்றாண்டுகளாகப் போற்றிப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. சுருங்கக்கூறலுறின், இன்று நம் தமிழகத்திலுள்ள கோயில்கள் எல்லாம், நம் திருமுறைகளின் வாயிலாகவே, வாழ்வும் வளமும் மாட்சிமையும் பெற்று வளர்ந்து வருகின்றன என்று, சற்றும் தயங்காது துணிந்து கூறலாம். உலக இலக்கியங்களின் வரிசையில், பெரிதும் விதந்து வியந்து குறிப்பிடத் தக்க நிலையில், மிக்க பழமையும் பெருமையும் தெய்விகமும் வாய்ந்து, நம் திருமுறைகள் தனிப்பெரு மாட்சிமையுற்றுத் தலைசிறந்து விளங்கி வருகின்றன.

திருமுறைகளில் திருமுருகன் :

திருமுறைகள் கடல் போன்று விரிந்து பரந்து விளங்குபவை. அவற்றை ஒரு தமிழ்ப் பெருங்கடல், அமிழ்தச் சுவைக் கடல் எனலாம். அக் கடலில் அவரவர் தத்தமக்கு வேண்டிய பொருளை, வேண்டிய அளவு முகந்துகொண்டு மகிழ்ந்து பயன்பெறலாம். "கண்ணுதல் கருணை

JL

வெள்ளம் ஆயிரம் முகத்தால் கண்டார்'' எனச் சேக்கிழார் பெருமான் பாடுதல் போல, நாமும் நம் திருமுறைகளை எத்தனையோ கண் கொண்டு ஆராயலாம். அந்நிலையில், தேனும் பேட்டை என வழங்கும் தெய்வநாயகன்பேட்டைத் திருமுருகன் கோயிலில், வழிபாட்டின் பொருட்டுக் கூடியுள்ள நாம், ''திருமுறைகளில் திருமுருகன்'' என்னும் பொருள்பற்றி இங்கு இயன்ற அளவு சிந்திப்பது மிகவும் பொருத்த முடையதாகும்.

திருமுறைகள், சிவபெருமானையே தமக் குரிய முழுமுதற் பொருளாகக் கொண்டு வழுத்துவன. ஆதலின், அவற்றின்கண் முருகனைப்பற்றிய குறிப்புக்கள் மிகுதியாகக் காணப்படமாட்டா. எனினும் ஆங்காங்கு அவற்றின் இடை இடையே வரும் அரியசொற் றொடர்களும் குறிப்புக்களும் நமக்கு ஆரா இன்பம் அளிப்பனவாக விளங்குகின்றன.

குறிஞ்சிக் கிழவன் :

(1) திருஞான சம்பந்தர் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) என்னும் தலத்திற்குச் சென்று இறைவனை வழிபடுகின்றார். அப்போது அவர் பாடியருளிய திருப்பதிகத்தில், அத்தலத்தின் இயற்கை அழகு நலன்களை வியந்து நயந்து பாடியருள்கின்றார். திருமுதுகுன்றத்தில், குன்றம் என்னும் நிலையில் இப்போது எதுவும் காணப்படவில்லையாயினும், அது தன் பெயருக்கு ஏற்பக் குறிஞ்சித் திணையைச் சார்ந்த தாக விளங்குகின்றது. அங்கே அத்திணைக்குரிய குறவர் குலமக்கள் வாழ்கின்றனர். அங்கு வாழும் குறவர்குலமகளிர் 'கருகு குழல்மடவார்' என்னும் நிலையில் கவின்மிக்கு விளங்குகின்றனர். அவர்கள் தம் நிலமாகிய, சிறந்த குறிஞ்சித் திணைக்கும், தங்களுக்கும் உரிய குலதெய்வ மாகிய முருகனின் பெருமைகளைப் புகழ்ந்து பாடிப் போற்றித்துதித்து மகிழ்கின்றனர்.

'' கருகுகுழல் மடவார்
கடிகுறிஞ்சியது பாடி,
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்று அடைவோமே ''

என இதனைத் திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூலில் ''சேயோன்மேய மைவரையுலகம்'' என முருகன் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வமாகக் குறிக்கப் பட்டிருக்கின்றான். முதன்முதல் மனிதன் தோன்றிய இடம், குறிஞ்சித்திணையே என நிலநூல் ஆராய்ச்சியாளர் கூறுவர். "குறிஞ்சிக் கிழவன்'' என்பது முருகனுக்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. ''கடல்அழச் சூர்அழ விம்மி அழும் குருந்தை (இளங்குழத்தையை)க் குறிஞ்சிக் கிழவன் என்று ஓதும் குவலயமே'' என அருணகிரிநாதர், தமது கந்தரலங்காரச் செய்யுள் ஒன்றில், மிக நயமாக இருபொருள் அமையப் பாடி இக்கருத்தை வலியுறுத்து கின்றார். தமிழ்நாட்டின் பழந்தமிழ்ப் பெருங் கடவுள் முருகனே என அறிஞர்கள் கூறுவர். அக்கருத்துக்களுக்கெல்லாம் அரண் செய்யும் வகையில், திருஞானசம்பந்தரின் மேலைத் தேவாரப்பாடற் பகுதி திகழ்தல் காணலாம்.

உகந்தது கந்தனையே :

(2) முருகனின் பெருமையினை வேறொரு பாடலிலும், திருஞானசம்பந்தர் சிறந் தெடுத்துப் புகழ்கின்றார். எண்ணில்லாத இவ்வுலகுயிர் அனைத்தையுமே தனக்குரிய மைந்தர்களாகக் கொண்டிருப்பவன் சிவபெருமான். எனினும் சிவபெருமானுக்கு மூத்தபிள்ளையார் (விநாயகர்), இளையபிள்ளை யார் (முருகன்), சேய்ஞலூர்ப்பிள்ளையார் (சண்டேசுவரர்), காழிப்பிள்ளையார் (திருஞான சம்பந்தர்) என்னும் சிலரைச் சிறந்த செல்வப் பிள்ளைகளாக அறிஞர்கள் சொல்லுவர்.

" உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே ''

எனவரும் திருஇயமகத் தேவாரப்பாடலில், சிவபெருமான் தனக்குப் பல பிள்ளைகள் இருப்பினும், கந்தன் என்னும் முருகனையே பெரிதும் விரும்பி உவந்தருள்கின்றான் என்று, திருஞானசம்பந்தர் அழகுற அருளிச் செய்கின்றார். ''உமையம்மை பொருந்திச் சேர்வது நின் உடம்பாகிய மெய்யினை; அருளாளர்கள் மனமொன்றித் தியானித்து உணரப்பெறுவது நின்னுடைய மெய்யான இயல்பினை; கற்றுவல்லவர்கள் வெறுப்பது கா (சோலை), மனை (வீடு) முதலிய பந்தபாசப் பொருள்களை; நின்னுடைய நெருப்புக்கண் எரித்தருள்வது காமன்என்னும் மன்மதனை; நினது மறைவிடமாகிய அரையை மறைப்பது முன்னேயுள்ள பணி (பாம்பு); தேவர்கள் விரும்பிச் செய்வது உனக்குரிய பணியாகிய திருத்தொண்டு. எல்லா உயிர்களையும் மைந்தர்களாகப் பெற்றிருந்தபோதிலும், நீ விரும்புவது முருகனாகிய கந்தனையே. இத் தகைய நீ, எத்தனையோ பலதலங்களில்இருப்பினும், பிரமபுரம் என்னும் சீர்காழியினையே உகந்து எழுந்தருளி இருக்கின்றாய்'' என்பது, இப்பாடலின் பொருள். இதன்கண் ''பெற்றும் உகந்தது கந்தனையே'' எனவரும் வரிதான், இங்கு நாம் பெரிதும் சிந்தித்து மகிழத்தக்கது.

நம் கடம்பன் :

(3) திருநாவுக்கரசர், தம்முடைய திருமுறைகளில் முருகனைப்பற்றி மிகச் சிறப்பாகச் சில பாடல்களை மொழிந்து இன்புறுத்துகின்றார். ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' எனத் தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளை வெளியிட்டருளுகின்ற தென்கடம்பைத் திருக் கரக்கோயிற் பதிகத்தில், அவர் முருகனை ''நம் கடம்பன்'' என உறவுரிமையன்புநலம் பாராட்டிச் சொல்லுகின்றார்.

நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கரம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே

இதன்கண் கடம்ப மலர்மாலையைப் பெரிதும் விரும்பி அணிபவன் முருகன் என்பதனை விளக்க, அவர் முருகனைக் ''கடம்பன்'' என்றே காரணப் பெயரால் வழங்குகின்றார். ''உருள் பூந் தண்தார்புரளும் மார்பினன்'' எனவரும் திருமுருகாற்றுப் படைவரியின் உரையில், நச்சினார்க்கினியர், ''கடம்பமாலை முருகனுக் குரியது; இது போகத்திற்குரிய தார்'' என விளக்கியிருப்பது, இங்குநாம் சிந்தித்து இன் புறுதற்குரியது.

செந்தில் வள்ளி மணாளன் :

(4) இங்ஙனமே, முருகனைப் பிறிதோர் இடத்தில் அவர் ''நம் செந்தில் மேய வள்ளி மணாளன்'' என உறவுரிமையன்புநலம் கொண்டாடிப் பாடியிருத்தல் காணலாம். வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காடு என்னும் தலத்தைப் பற்றிய திருத்தாண்டகத்தில், இங்ஙனம் திருநாவுக்கரசர் முருகனைப் பற்றி மொழிந்து மகிழ்கின்றார்.

கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய்;
காலனையும் காலாற் கடிந்தான் கண்டாய்;
புள்ளி உழைமானின் தோலான் கண்டாய்;
புலியுரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்;
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்;
வெண்ணீற்றான் கண்டாய்; நம் செந்தில் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்;
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

இப்பாடலில் 'நம்' என்பது, நம்செந்தில்—நம் வள்ளி—நம்வள்ளிமணாளன் என மூன்று வகையாகவும் சென்று இயையுமாறு அமைந்துள்ள சிறப்பு, நமக்குப் பெரிதும் உவகை பயப்ப தொன்றாகும். இத்தொடரில் வரும் செந்தில் என்னும் சொல்லால், முருகனின் ஆறு படை வீட்டைப்பற்றிய குறிப்புக்கள் ஒருங்கே தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னரேயே, திருநாவுக்கரசர் போன்ற செந்தமிழ்ச் சிவ நெறிச் சான்றோர்களால் போற்றப்பெறும் நிலையில், முருகனின் ஆறு படை வீடுகள்

விளங்கியமை, இதனுல் இனிது விளங்குகின்றது. இஃதன்றியும், நம்மனோர் உள்ளமெலாம் கொள்ளைகொள்ளும் வகையில், முருகன் வள்ளியை மணந்தருளிய வரலாற்றுண்மைகளும், இச்சொற்றொடரால் திருநாவுக்கரசரால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பெற்றிருக்கின்றன எனக் கொள்ளுதல் கூடும்.

சூரபன்மாவைத் தடிந்தவன் :

முருகனின் திருவவதாரம் சூரபதுமனைத் தடிந்து தேவர்களைக் காத்தருளுதற் பொருட்டு நிகழ்ந்ததேயாகும். நல்லவர்களைக் காத்தலும் அல்லவர்களை அடக்குதலும், ஒரு தலைவன் அல்லது கடவுளுக்குரிய சிறந்த கடமையாகும். இதனை முருகப்பெருமான் திறம்படச் செய்தருளினன் என்பதை.

''சமர சூரபன் மாவைத் தடிந்த வேற்
குமரன் தாதை, நற்கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம்அது ஆளுடை யார்களே''

எனவரும் பாடலில் திருநாவுக்கரசர் சிறப்புற எடுத்துரைத்துப் பாராட்டியருள்கின்றார். முருகனை நினைந்தால் அவனது குமரப்பருவமும், வேற்படையும், அதுகொண்டு அவன் சூரபன்மனைத் தடிந்து வென்ற திறமும், ஒருங்கே நம் நெஞ்சகத்தில் தோன்றுதல் இயல்பு. ஆதலின் '' சமர சூரபன்மாவைத் தடிந்த வேற்குமரன் '' என்னும் அழகிய தொடரின் அருமைப்பாடு, நினைந்தொறும் நமக்குப் பெரு மகிழ்ச்சி அளிப்பதாகும்.

முருகன் மயில் ஊர்தியை உடையவன். வீரர்களுக்கெல்லாம் பெரு வீரன்; ஒப்புயர்வற்ற சிறந்த பெருந்தலைமகன். வீரமாவது பகைவர்களைக் கொல்லுதலும், வெல்லுதலும் அன்று. கொடிய பகைவர்களையும், நல்லவர்களாக மாற்றி, அவர்களைத் தன்பால் உண்மை அன்பும் நண்பும் கொண்டு ஒழுகுமாறு செய்ய வல்லவனே சிறந்த பெருவீரனுவான். பகைவர்களைத் தன் பலத்தால் வெல்லுபவர்களைவிட, அவர்களைத்தன் குணத்தால் கவர்ந்து நட்பாக்கிக் கொள்ள வல்லவனே சிறந்த தலைமகன் ஆவான். பிற கடவுளரைப் போல முருகன் சூரனை அழித்திலன் ; அவனைத் தன் அடியவர்களுள் சிறந்தவனுக, முதல்வனுக மாற்றி ஏற்றுப் போற்றி ஆட்கொண்டருளினுன். இதுவே உண்மையான வெற்றி. இவ்வெற்றியையே தமிழ் இலக்கண நூல்கள் அரசவாகை என ஆராய்ந்து கூறும்.

தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றுல்,
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றே ?
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!

எனவரும் கந்தபுராணப்பாடலில், கச்சியப்ப சிவாசாரியர் முருகனின் அரசவாகையாகிய அருள் இயல்பின் திறனைவியந்து போற்றி மகிழ்ந்திருக்கக் காணலாம். "பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் தங்கிற்று உலகு'' என்னும் நிலையிற் கொடிய பகைவனையும், தனக்குரிய இனிய அடியவனுக மாற்றி ஆட்கொண்டருளிய மாட்சிமை மிக்க முருகனே, ஒப்புயர்வற்ற தலைமகன் ஆவான். ஆதலின்,

முன்னை யார் மயில்ஊர்தி முருகவேள்
தன்னை யார்எனில், தான் ஓர் தலைமகன்;
என்னை ஆளும் இறையவன் எம்பிரான்
பின்னை யார்அவர் பேரெயி லாளரே

எனவரும் திருக்குறுந்தொகையால், திருநாவுக்கரசர் முருகனை ஒரு பெரும் தலைமகனுகக் குறிப்பிட்டு, அவனுக்குரிய மயிலூர்தியையும் சுட்டியருளியுள்ள திறம், நீள நினைந்து உணர்ந்து நெஞ்சம் நெக்குருகி இன்புறற்பாலதாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சிபுரத்திலுள்ள திருஓணகாந்தன்தளி என்னும் தலத்தில் ''காணமொடு பொன்வேண்டிப் பாடிய கலை விளங்கும் யாணர்ப் பதிகத்தின்கண்,

திங்கள் தங்கு சடையின் மேலாத்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் ;
கணபதியேல் வயிறுதாரி ;
அங்கை வேலோன் குமரன் பிள்ளை ;
தேவியார் கோற்றட்டி ஆளார்;
உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம் ;
ஓணகாந்தன் தளி உளீரே

என அருளிச் செய்துள்ள ஒரு பாடலில் முருகனைப்பற்றி, '' அங்கை வேலோன் குமரன் பிள்ளை '' என அருளிச் செய்திருப்பது காணலாம். குமாரன் என்னும் சொல் தீமைகளை அழிப்பவன் (கு-குற்சிதம், அருவருப்பு, தீமை; மாரன்-அழிப்பவன், மரிக்கச் செய்பவன்) எனப் பொருள்படும். வேல் என்பது வெல்லுவது என்னும் பொருளையுடையது. முருகன் வேற்படை கொண்டு தீமைகளை அழித்து உயிர்களுக்கு அருள்புரியும் திறனை இத்தொடர் இனிது விளக்குகின்றது.

இங்ஙனம் திருமுறைகளில் ஆங்காங்கு முருகனைப்பற்றி வரும் குறிப்புக்கள் பற்பலவாகும். சிறப்பாகப், பதினொன்றும் திருமுறையில் முருகனைப் பற்றிய பழம் பெருந்துதி நூலாகத் திகழும் திருமுருகாற்றுப்படை அமைந்துள்ளது. அவைகளையெல்லாம் இங்கு எடுத்துக்கூறல் இயலாது. ஆதலின் பன்னிரண்டாம் திருமுறையில் வரும் ஒருசில செய்திகளை மட்டும், இங்குக் குறிப்பிட்டு அமைதல் சாலும்.

பெரியபுராணத்தில் முருகன் :

தெய்வப் புலவர் ஆகிய ஆசிரியர் சேக்கிழார்பெருமான், தம் இளமைப் பருவத்தில் தாம் தோன்றியருளிய குன்றத்தூரின்கண் உள்ள குன்றில் ஏறி, ஓடியாடி இன்புற்றிருப்பர். அக்குன்றின் மீது கோயில்கொண்டுள்ள முருகனைப் பலகால் வழிபட்டு மகிழ்ந்திருப்பர். அதன்விளைவாக, அவர்தம் உள்ளத்தில் இளமையிலேயே முருகனிடம் எல்லையற்ற அன்பும் ஈடுபாடும் தோன்றி வளர்ந்திருத்தல் வேண்டும். தமிழ் நலஞ்சான்ற எவருக்குத்தான் முருகன்பால் அன்பும் ஆர்வமும் ஈடுபாடும் உண்டாகாதிருத்தல் இயலும்? முருகனிடம் தாம்கொண்ட பெருகிய அன்பின் திறனால், அவர் தாம் பாடத் தலைப்பட்ட திருத்தொண்டர் புராணத்திற்கு முருகனோடு நேரே பெரிதும் தொடர்பு இல்லையாயினும், ஆங்காங்கே ஏற்றபெற்றி உரிய தொடர்புகளை வருவித்துக்கொண்டு, உள்ளம் உருகும் உணர்வுடன் அப்பெருமானைப் போற்றிச் செல்கின்றார்.

முருகன் அழகன் :

(1) முருகன் அழகுக் கடவுள். முருகு என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். ''ஆயிரகோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றாக மேயின எனினும், செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில் தூய நல் எழிலுக்கு ஆற்றாது '' என்னும் வரிகளால், கச்சியப்பர் முருகன் அழகுத்தெய்வம் என்பதனை வற்புறுத்தியுள்ளார். இதனை நினைப்பிக்கும் வகையில், திருவாரூர்ப் பூங்கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பண்டை விதி சடைகூட்டப் பரவையார் கண்டபோது, அவர்தம் பேரழகின் பெற்றியினை வியந்து,

முன்னேவந்து எதிர்தோன்றும்
முருகனோ? பெருகொளியால்
தன்நேர்இல் மாரனோ?
தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர் செஞ்சடை அண்ணல்
மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னே! என் மனம்திரித்த
இவன்யாரோ? என நினைந்தார்!

என்று பரவையார் சுந்தரரைக் கண்ட பான்மையினைச் சேக்கிழார் பாடியிருக்கக் காண்கின்றோம். சுந்தரரும் பரவையாரும், தம் சிந்தை ஒன்றிக் காதல்கொண்ட செய்தியினை விளக்கும் இச் சிறந்த பகுதியில், "முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ?" என்றதனால், முருகனை அழகிற்சிறந்த தெய்வமாகச் சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

முன்னியன முடிப்போன்:

(2) முருகன் தன்னை அன்பினால் வழிபடுவார்க்கு, அவர்கள் வேண்டும் நலங்கள் பலவும் வேண்டியவாறே விரைந்து அளிக்கும் இயல்புடையவன். இவ்வுண்மையையும் சேக்கிழார் சுவாமிகள் சிறந்தெடுத்துச் செவ்விதிற் புலப்படுத்துகின்றார். "முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின்" எனப் புறநானூற்றுப்பாடல் ஒன்றும், தன் அடியவர்கள் விரும்பி நினைவன எல்லாவற்றையும் விரைந்தினிது முடித்து வைத்தலிற் சிறந்த தெய்வம் முருகனே என்று புகழ்ந்திசைத்துப் போற்றுகின்றது.

பொத்தப்பி நாட்டில் உடுப்பூரில் வேடர் தலைவனாக விளங்கிய நாகனும், அவன் மனைவி தத்தையும். "இனி இவர்களுக்கு மகப்பேறு வாய்த்தல் அரிது" என்று எவரும் கூறத்தக்க நிலைமையில், முதுமை அடைந்து விட்டனர். எனினும், அவர்கள் பிள்ளைப்பேறு எய்துதலில் எல்லையில்லாத விருப்பம் கொண்டிருந்தனர். அவ்விருப்பம் நிறைவேறுதற் பொருட்டு' அவர்கள் முருகனையே பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நின்றனர். முருகனைப் பிரார்த்தித்துக் கோயிலுக்குச் சேவலும் மயிலும் விடுத்தனர். முருகனைத் துதித்துக் குன்றக் குரவைகள் நிகழ்த்தினர். பெருவிழாக்கள் எடுத்தனர். முருகன் அருளால் அவர்களுக்கு ஒரு மைந்தன் தோன்றினான். கண்ணப்பர் என்று அம் மைந்தனையே இன்று உலகம் புகழ்ந்து போற்றுகின்றது.

"பொருவரும் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வற் பேறே
அரியதென் றெவரும் கூற
அதற்படு காத லாலே
முருகலர் அலங்கற் செவ்வேல்
முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்"

"மயிலுடைக் கொற்ற ஊர்தி
வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளி னாலே...

எனவரும் பெரிய புராணத் திருப்பாடல்கள் ஈண்டு நினைவு கூர்தற் குரியன. முருகன் குறிஞ்சி நிலத்தெய்வ மாதலும், குறிஞ்சி நிலமக்கள் அப்பெருமானை வழிபடும் முறைகளும் பிறவும், ஈண்டுச் சேக்கிழாரால் குறிப்பிடப்பெற்றிருத்தல் காணலாம்.

தாமரைமிசைத் தனிமுதற் குழவி:

(3) முருகனுக்குச் சரவணபவன் என்று ஒரு திருப்பெயர் உண்டு. சிவபிரானின் திருமுகங்களினின்று வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகளை, வாயுதேவனும் அக்கினிதேவனும் சுமந்து சென்று கங்கையின்கண் சேர்த்தனர். கங்கையானவள் அவற்றைச் சரவணப்பொய்கையில் சேர்த்தனள். சரவணப்பொய்கையில், அப்பொறிகளினின்று வெளிப்பட்ட முருகன், தாமரை மலரில் வீற்றிருந்தான். இதனை, "மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல், நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி, அறுமுக உருவாய்த் தோன்றி, அருளொடு சரவணத்தின் வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்தருளினானே" எனவரும் கந்தபுராணப் பாடல் உணர்த்தும்.

சரவணப் பொய்கையில் தாமரை மலரின் மேல் முருகன் வீற்றிருந்தருளிய தன்மை, அண்டப்புத்தேள் ஆகிய விராட் புருடனின் மனமெனும் தாமரை மலரிற் சிவபிரான் அமர்ந்திருப்பதனை ஒத்திருந்தது. அன்றியும், முருகன் இனிப் பின்னர்ப் பிரமனை பிரணவப்பொருள் வினவி, அவன் விடை

கூறுமையால், அவனைத் தலையிற் குட்டிச் சினந்து சிறையில் இடுவித்து, அவனது சிருட்டித் தொழிலைத் தானே செய்யத் தொடங்கி, அப்பிரமனைப்போலத் தாமரை மலரின்மேற் ஏறி அமர இருக்கும் தன்மையைப் போன்றிருந்தது, எனப் பலவகைகளில், முருகன் சரவணப்பொய்கையில் தாமரைமலரில் வீற்றிருந்த தன்மையினைக், கந்தபுராணக் கவிதைகள் கவினுற விளக்கும்.

இதுபற்றிய ஒரு குறிப்பும், பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில் பாங்குற அமைந்து காணப்படுகின்றது. சீர்காழியில் சிவபாதஇருதயராகிய தந்தையும், பகவதியம் மையாராகிய தாயும் செய்ததவத்தின் சிறப்பினால், திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தருள்கின்றார். அவரை அவர்தம் பெற்றோர்கள் தொட்டிலில் இடுகின்றனர். சரவணப் பொய்கையில் தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் முருகனாகிய குழந்தையைப் போல, அப் பெற்றோர்கள் தொட்டிலில் இட்டு அமர்வித்தார்கள் எனப் பாடுகின்றார் சேக்கிழார்.

"நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்
சேமஉத யப்பரிதி யில்திகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி என்னத்
தூமணி நிரைத்து, அணிசெய் தொட்டில்
அமர்வித்தார்"

சரவணத்துத் தனயனார் :

சிவபிரானின் அருள் உருவத்திருக்கோலங்களுள், சோமாஸ்கந்தமூர்த்தம் என்பது ஒன்று. சிவபிரான் உமையம்மையுடனும், கந்தப் பெருமானுடனும் எழுந்தருளி விளங்குவதே, சோமாஸ்கந்த மூர்த்தம் (சஹ + உமா + ஸ்கந்தம்) என்னும் திருக்கோலம் ஆகும். இறைவன், சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்றின் வடிவமாக விளங்குகின்றான் என ஞான நூல்கள் கூறும். இறைவன் சத்து, அம்மை சித்து, முருகன் ஆனந்தம் எனத் திகழ்வதே, சோமாஸ்கந்த மூர்த்தம். இத்திரு உருவத்தை வழிபடுவோர், கணவனும் மனைவியுமாய் இன்ப அன்புற்று வாழ்வதுடன், நல்ல மகப்பேறும் குல வளர்ச்சியும் பெறுவார்கள் என நூல்கள் நவில்கின்றன.

இத்தகைய திருவுருவத்தைப் பற்றிய குறிப்பும், பெரிய புராணத்தில் சிறுத்தொண்டர் வரலாற்றில் வருகின்றது. பிற அடியார்களுக்கெல்லாம் அம்மையும் அப்பனுமாக மட்டில், வெள்விடை மேல் தோன்றிக் காட்சிகொடுத்து அருள்புரியும் சிவபெருமான், சிறுத்தொண்டர்க்கு மட்டும் மலைபயந்த தையலோடும், சரவணத்துத் தனயரோடும் அணைந்து, சோமாஸ்கந்தமூர்த்தமாக வந்து தோன்றி அருள்புரிகின்றான்.

"கொன்றை வேணி யார்தாமும்
பாகங் கொண்ட குலக்கொடியும்,
வென்றி நெடுவேல் மைந்தரும் தம்
விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார்
நீடும் மகனார் தாதியார்
என்றும் பிரியா தேஇறைஞ்சி
இருக்க உடன்கொண் டேகினார்"

என இதனைச் சேக்கிழார் பெருந்தகை கூறுகின்றார். சிறுத்தொண்டரின் குடும்பம் முழுவதுமே தம்மை விரும்பி வழிபட்டுப் பணிபுரிந்ததினால், சிவபெருமானும் அவர்களைத் தம் குடும்பத்துடன் போந்து ஆட்கொண்டருளினர் போலும்.

முடிவுரை :

இங்ஙனம் சைவத்திருமுறைகள் பன்னிரண்டிலும், ஆங்காங்கே பல இடங்களிற் குறிப்பிட்டுப் போற்றப்படும் திருமுருகனாகிய, செந்தமிழ்ப் பெருங் கடவுளின் சிறப்பினை உணர்ந்து, அவர்தம் திருவடிகளை அன்புடன் வழிபட்டு, நாம் அனைவரும் இம்மை மறுமை நலங்கள் யாவும் எய்தி, உய்ய முயலுவோமாக.

— ஆசிரியர்.

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய
திருமாலை

[மூலமும் உரையும்]

(முற்றொடர்ச்சி)

ஒருவில்லால் ஓங்கும் முந்நீர்
அடைத்து, உல கங்கள் உய்யச்
செருவிலே அரக்கர் கோனைச்
செற்றநம் சேவகனார்,
மருவிய பெரிய கோயில்
மதிள்திரு வரங்கம் என்னாக்
கருவிலே திருவி லாதீர்
காலத்தைக் கழிக்கின் றீரே

பொழிப்புரை :

சார்ங்கம் என்கிற ஒரு வில்லினால் கொந்தளிப்புள்ள கடலை அணைகட்டி, உலகங்கள் எல்லாம் வாழும்பொருட்டு, போர்க்களத்திலே இராவணனை முடித்தருளிய நம்முடைய தலைவரும், பெருவீரருமாகிய திருமால், பொருந்தி வாழ்கின்ற பெருமைமிக்க கோயிலாவது, ஏழுமதில்களை உடைய திருவரங்கம் என்று சொல்லமாட்டாமல், கருவிலே திருவில்லாதவர்களாகிய நீங்கள் காலத்தை வீணாகக் கழிக்கின்றீர்களே, அந்தோ! இது என்?

குறிப்புரை :

இராமபிரான் கடலரசனாகிய வருணனை அடைக்கலம் புகுந்து வழிவிடுக என்று வேண்டிக்கொண்ட போதும், அவன் வந்து முகங்காட்டாது ஒழிய, இராமபிரான் மிகவும் சினங்கொண்டு இலக்குவனை நோக்கி, ''வில்லைக் கொண்டுவா'' என்று பணித்தருள, அதன் பின்னரே கடலரசன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து பணிந்து தன்மீது அணைகட்டி இலங்கைக்குப் போகும்படி அமைந்தனன். ஆதலால், ''ஒரு வில்லால் ஓங்கும் முந்நீர் அடைத்து'' என்றார். முந்நீர்-கடல்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்று நீர்களையுடையது. 'ஓங்கு' என்பது இங்குக் கடலின் இயல்பான கொந்தளிப்பைக் கூறுவது அன்று. கடலரசன் ஆகிய வருணன், இராமபிரானின் சீற்றத்தாலே அஞ்சி நடு நடுங்கி வந்து பணிந்த திறன் கூறியவாறு. உலகங்களையெல்லாம் உய்விக்கக் கருதிய பெருமாள், தனித்தனியாக ஒவ்வொருவருடைய இருப்பிடமும் சென்று அவர்களை வாழ்விப்பது அரிய செயல் என்று எண்ணி, இராவணன் ஒருவனைக் கொன்றுவிட்டால், உலகங்களையெல்லாம் உய்வித்ததாகும் என்று கருதி, இராவணனைக் கொன்றருளினர் என்னும் கருத்துத்தோன்ற, ''உலகங்கள் உய்யச் செருவிலே அரக்கர் கோனைச் செற்ற''

என்றார். அரக்கர் கோன்-இராவணன். இராவணவதம் புரிந்ததனால் வினையற்று நின்றும், இராமாவதார அனுபவத்தை இழந்த பிற்பாடர்க்கும் நலம் புரிதற்கே, பெருமாள் திருவரங்கத்தில் எழுந்தருளி வந்து கண் வளர்ந்தருள்கின்றார் ஆதலின், நம் "சேவகனார் மருவிய பெரிய கோயில்" என்றார்.

இராமாவதாரத்தைப்போன்று, இங்கும்சில இடர்ப்பாடுகள் விளையுமோ என்று அஞ்சித் திருமங்கையாழ்வார் போன்ற சான்றோர்கள் காவலாக இட்டு வைத்த மதிலையுடையது என்னும் கருத்தில் 'மதிள் திருவரங்கம்' என்றார். திருவரங்கத்தையும், அங்கு எழுந்தருளி விளங்கும் திருவரங்கநாதனையும் நினைந்து போற்றாதவர்களின் புன்மைநிலை குறித்து, "கருவிலே திருவிலாதீர்" என்றார். ஞானிகள் இறைவனை இடைவிடாது போற்றிக் கொண்டிருந்தும் 'பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்' என்றாற்போலக் கதறி அழுதலைக் கேட்டுவைத்தும், நீங்கள் காலத்தைப் பாழே போக்குகின்றீர்களே என்று, ஆழ்வார் நம்பொருட்டுப் பெரிதும் பரிவிரக்கம் கொண்டு வருந்திக் 'காலத்தைக் கழிக்கின்றீரே' எனக் கதறுகின்றார். *(11)*

நமனும் முற்கலனும் பேச
நரகில் நின்றார்கள் கேட்க,
நரகமே சுவர்க்கம் ஆகும்
நாமங்கள் உடைய நம்பி,
அவனதுஊர் அரங்கம் என்னாது
அயர்த்துவீழ்ந்து அளிய மாந்தர்,
கவலையுள் படுகின்றார். என்று
அதனுக்கே கவல்கின் றேனே

பொழிப்புரை :

இயம தருமனும், முற்கலன் என்பவனும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்குங்கால், அதனை நரகத்திலிருந்தவர்கள் கேட்டதின் பயனாக, அந்த நரகம்தானே சுவர்க்க லோகம் ஆகும்படி செய்த, சிறப்பு வாய்ந்த திருப்பெயர்களையுடைய நம்பியாகிய பெருமாளின் திவ்வியதேசம், திருவரங்கம் ஆகும் என்று சொல்லாமல், இரங்கத்தக்க மனிதர்கள், தம் இயல்பை மறந்து உலகியற் படுகுழிகளில் விழுந்து, துன்பத்தில் அகப்பட்டுக் கொள்கின்றார்களே என்று, அதற்காகவே யான் மிகவும் கவலைப் படுகின்றேன்.

குறிப்புரை :

சான்றோர்கள் தம் நலனுக்காக அல்லாமல், உலக நலங்கருதியே கவலை கொள்வார்கள் என்னும் உண்மையினை, இப்பாடல் உணர்த்துகின்றது. "நன்றறிவாரிற் கயவர் திருவுடையர் நெஞ்சத்து அவலமிலர்" என்னும் திருக்குறளும் இங்குச் சிந்தித்தற்குரியது. முற்கலன் என்பவன் மிகக் கொடிய ஒரு பெரும் பாவி. அவன் ஒருநாள் கோதானம் செய்யும்போது 'கிருஷ்ணாய' என்று சொல்லிச் செய்தான். அதனால் பின்னர் அவன் மாண்டபோது, இயமன் அவனை எதிர்கொண்டு சிறப்புச் செய்தான். அதுகண்ட முற்கலன் தனக்குச் சிறப்புச்செய்வதற்குக் காரணம்வினவ, அதற்கு இயமன் 'கிருஷ்ணன்' என்னும் பெயரை நீ ஒருமுறை சொல்லியுள்ளாய் என்று அவனைப் புகழ்ந்து கூறினான். இங்ஙனம் இவ்விருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, கிருஷ்ணன் என்னும் சொல், அங்கு நரகத்தில் இருந்தவர்களின் காதில் விழுந்தது. அதன் பயனாக அவர்களும், தம் துன்பங்கள் நீங்கி இன்பம் எய்தினார்கள். இத்தகைய ஆற்றலும் சிறப்பும் அமைந்த திருப்பெயர்கள் பலவற்றை உடையவர் பெருமாள் என்பதனை, ஆழ்வார் இப்பாடலின் முதலிரண்டு அடிகளால் குறிப்பிட்டு அருளினார். நரகத்தையே சுவர்க்கம் ஆக்க வல்லது, இறைவனின் திருப்பெயர் என்பது கருத்து. தீவினைக்குரிய இடம், இங்ஙனம் நல்வினைக்குரிய இடமாதல் கூடுமோ எனின், இராவணன் இருக்குங்கால் 'தாமசபுரி' எனப் பெயர்பெற்றிருந்த இலங்கைமாநகரம், அவன் இறந்த பிறகு விபீடணனின் ஆட்சியில் சாத்விகபுரி எனும்படி மாறிச் சிறந்து விளங்கியது. ஆதலிற் கூடும் என்பது பெரியோர் கருத்து. *(12)*

எறியும்நீர் வெறிகொள் வேலை
மாநிலத்து உயிர்கள் எல்லாம்
வெறிகொள்பூந் துளப மாலை
விண்ணவர் கோனை ஏத்த ;
அறிவிலா மனிசர் எல்லாம்
அரங்கம் என்று அழைப்பர் ஆகில்
பொறியில்வாழ் நரகம் எல்லாம்
புல்எழுந்து ஒழியும் அன்றே

பொழிப்புரை :

அலைகள் வீசுகின்ற தண்ணீரையும், புலாலின் நாற்றத்தையும் கொண்டிருக்கின்ற கடலால் சூழப்பெற்ற இப்பெரிய உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும், நறுமணம் கமழ்கின்ற திருத்துழாய் மாலையை அணிந்துள்ள தேவர்களின் தலைவனாகிய திருமாலைத் துதிப்பதற்கென்றே அமைந்துள்ளன. அங்ஙனம் துதிப்பதற்கும் அறிவில்லாத மனிதர் யாவரும், அரங்கம் என்ற பெயரைமட்டுமே கூறுவார்களாயினும், அவ்வளவிலேயே ஐம்பொறிகளின் வயப்பட்டு வாழ்கின்ற, நரகம் போன்று கொடிய இவ்வுலக வாழ்வின் தீங்குகள்முழுவதும், புல் முளைத்து அழிந்தொழிந்து போய் விடும்.

குறிப்புரை :

திருவரங்கம் என்ற பெயரைச் சொன்ன அளவிலேயே, தீவினைகள் நீங்கி நலம்பெறலாம் என்பது, கருத்து. 'மாநிலத்து உயிர்களெல்லாம் இருப்பது விண்ணவர்கோனை ஏத்தவே' என்பது, ஆழ்வாரின் முடிந்த முடிவான துணிவு. 'அழைப்பராகில்' என்றதனால் அங்ஙனம் அழைத்தல் பாவிகளுக்கு இயலாது என்பது கருத்து. ஞானிகளுக்கு இவ்வுலகம் நரகம்போலத் தோன்றும் ஆதலின் அவர்களின் கருத்தால் இவ்வுலகத்தை ஆழ்வார் நரகம் என்று குறிப்பிட்டார். வேலை-கடல், வெறி-நறுமணம், புல் எழுந்து ஒழியும்-பாழாகிப் போகும்; நீங்கியொழியும்.

வண்டினம் முரலும் சோலை,
மயிலினம் ஆலும் சோலை,
கொண்டல்மீது அணவும் சோலை,
குயிலினம் கூவும் சோலை,
அண்டர்கோன் அமரும் சோலை,
அணிதிரு வரங்கம் என்னா
மிண்டர்பாய்ந்து உண்ணும் சோற்றை
விலக்கி, நாய்க்கு இடுமின் நீரே

பொழிப்புரை :

வண்டுகளின் கூட்டங்கள் இனிமையாக ரீங்காரம் செய்கின்ற சோலைகளும், மயில்களின் கூட்டங்கள் தோகையை விரித்து நடனம் செய்கின்ற சோலைகளும், மேகங்கள் மேலே வந்து தன்மேற் படிய நிற்கின்ற சோலைகளும், குயிலின் கூட்டங்கள் இனிமையாகக் கூவுகின்ற சோலைகளும், தேவருக்குத் தலைவனாகிய திருவரங்கநாதன் விரும்பி உறையும் சோலைகளும், அழகாகச்சூழ்ந்துள்ளதிருவரங்கம், என்று சொல்லமாட்டாத மூர்க்கர்கள் மேல் விழுந்து உண்ணுகின்ற உணவை, அவர்கள் உண்ணாதபடி தடுத்து நீங்கள் நாய்களுக்கு இடுங்கள்.

குறிப்புரை :

பெருமாள் உயிர்களின் ஈடேற்றத்தின் பொருட்டுத் திருவரங்கத்திற்கு வந்து எழுந்தருளியிருக்கின்றார். அவரது அருள் இயல்பினை உணர்ந்து, நன்றியுடன் போற்றி உய்யாதவர்களைத் 'திருவரங்கம் என்னாமிண்டர்' என்றார். எவருள்ளமும் கவர்ந்து கொள்ளை கொள்ளத்தக்க சிறப்பினை உடையது திருவரங்கம் என்பார், அதன் இயற்கை நலங்களை வியந்து புகழ்ந்தார். மயிலும் குயிலும் வண்டுகளும் கொண்டல்களும் போன்ற அஃறிணைப் பொருள்களும், விரும்பும் இயல்புடைய திருவரங்கத்தினை, இவர்கள் விரும்புகின்றிலரே என ஆழ்வார் பெரிதும் இரங்குகின்றார். நன்றி

யில்லாத மனிதர்கள் உண்ணுவதற்கு உணவு அளித்தலைவிட, நன்றியுணர்வுடைய நாய்கள் உண்ணுதற்கு உணவு அளித்தல் நலம்பயக்கும் என்பது கருத்து. (14)

மெய்யர்க்கே மெய்யன் ஆகும்,
விதியிலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்யன் ஆகும்
புட்கொடி யுடைய கோமான்,
உய்யப்போம் உணர்வி னார்கட்கு
ஒருவன்என்று உணர்ந்த பின்னை,
ஐயப்பாடு அறுத்துத் தோன்றும்
அழகன்ஊர் அரங்கம் அன்றே

பொழிப்புரை :

கருடனாகிய பறவையைக் கொடியாக உடைய தலைவராகிய திருமால், நல்வினை யில்லாத என்னைப்போல, அருளைப் பெறுதலில் வெறுப்பின்மை உடையவர்க்குத் தன் இயல் பினை உள்ளபடி காட்டி உணர்விப்பான். அவன் திறத்தில் வெறுப்புற்றுப் பகைமை கொண் டுள்ள பொய்யர்களுக்குத் தனது இயல்பைக் காட்டாமல், அவர்களுக்குத் தானும் பொய்ய னாய் இருப்பான். தாம் உய்வதன்பொருட்டு நன்னெறியிற் செல்லும் உணர்வினையுடைய மெய்யர்க்கு, இறைவன் ஒருவன் உண்டு என்று நல்லறிவு தோன்றிய பின்னர், அவர்களுக்கு மேலும் நேரக்கூடிய ஐயங்களைப்போக்கி, அவர்களின் முன்னர்த்தோன்றிக் காட்சியளிக் கின்ற அழகையுடையவனாகிய பெருமாளின் இருப்பிடம் திருவரங்கம் ஆகும்.

குறிப்புரை :

'மெய்யர்' என்பது இப்பாடலில் மெய் யுணர்வுடையவர் என்று பொதுவாக இல்லா மல், வெறுப்பின்மை (அத்வேஷம்) உடையவர் என்னும் பொருளில் வந்தது. எனவே பொய்யர் என்பது, அதற்கு மறுதலையாக வெறுப்புடையு வர் என்னும் பொருளைச் சுட்டிக் காட்டி நின்றது, 'விதிஇலா என்னைப் போல' என்னும் தொடர், இடைநிலைத் தீவகமாக இறைவன் மெய்யர்க்கு மெய்யனாவதற்கும், பொய்யர்க் குப் பொய்யனாவதற்கும் உவமையாக வந்தது. யான் இறைவன்பால் வெறுப்புற்று அவனது இருப்பை மறுத்துப் பொய்யனாகத் திரிந்த போது, இறைவனும் என்னை வெறுத்து என்னைப் புறக்கணித்துப் பொய்யனாக இருந் தான். யான் அவன்பால் வெறுப்பின்றி மெய் யனாய் உள்ள இப்போது, என்பால் இறைவனும் வெறுப்பின்றி என்பக்கல்தானும் மெய்யனாய்த் தன் இயல்பெல்லாம் எனக்கு விளங்குமாறு சிறப்புணர்வைத் தோற்றுவித்தான் என்பது கருத்து.

மெய்யுணர்வு பிறந்தபின்னர், இவ்வாழ் வார் தம்மைக் குறித்து 'விதியிலா என்னை' என்று வெறுத்து இழித்துக் கூறிக்கொள்வது பொருந்துமோ எனின், முன்னரே தாம் இறைவனை அணுகி ஈடேறி உய்யவேண்டி யிருக்க, அங்ஙனம் இல்லாமல் நெடுநாள் அவனை இழந்துகிடந்த தமது தீவினையினை நினைத்து வருந்திக் கூறினர் ஆதலின், பொருந்தும் என்பது. தத்துவஞானம் நிரம்பாமல் தன் பக்கம் வெறுப்பின்மை மட்டுமேயுடைய உயிர் களையும் இறைவன் காத்தருளுவதற்குக் காரணம், உயிர்கள் எல்லாம் தனக்கு உடைமை யாக இருக்க, தான் அவற்றிற்கு உடையவனாய் விளங்கும் உறவு உரிமையேயாம் என்பது தோன்றக் 'கோமான்' என்றார். ''மிகப் பெருஞ் செல்வராய் இருப்பவர்களேயாயினும், ஒரு காசு விழுந்த இடத்தே சென்று தேடா நிற்பர் கள். தத்தம் பொருளை விடமாட்டாமை யாலே'' எனவரும் விரிவுரை இங்கு உணரற் பாலது. விதி-நல்லூழ், நல்வினை.

—தொடரும்

(ஆசிரியர்).

மாண்புமிகு தமிழக முதல்வர்

"தமிழவேள்"

டாக்டர் திரு. கலைஞர் பேருரை

இராமலிங்கர் பணிமன்றத்தின் சார்பில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாட் பெரு விழாவும், வடலூர் அருட்பிரகாச வள்ளலார் விழாவும். வழக்கம்போல் சென்னை மயிலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் சாலையின்கண் உள்ள ஏ.வி.எம். இராசேசுவரி திருமணமண்டபத்தில், 2-10-71 முதல் 8-10-71 வரை, ஏழு நாட்கள் மிகவும் சிறப்புற நடைபெற்றது. 8-10-71 வெள்ளிக்கிழமை மாலை, திரு. ஜி. வன்மீகநாதன் அவர்கள் இயற்றிய திருவாசகம் ஆங்கிலமொழி பெயர்ப்பு, தவத்திரு ஊரன் அடிகள் இயற்றிய இராமலிங்க அடிகள் வரலாறு, கவிஞர் திரு. எஸ். டி. சுந்தரம் இயற்றிய 'காந்தியுகம்' என்னும் மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவும், அந்நூலாசிரியர்களுக்குப் பாராட்டு விழாவும், சிறப்புற நடைபெற்றன. அருளிசைத்தென்றல் புலவர் திரு. கோ. முருகையா, செல்வி. தி. க. ச. மனோன்மணி ஆகியோர், இறைவணக்கப்பாடல்கள் பாடினர்.

விழாவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள், தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், திரு. பெரியசாமித்தூரன், முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர், மேற்குறித்த மூன்று நூல்களைப்பற்றித் திறனாய்வு நிகழ்த்திப் பாராட்டுரைகள் வழங்கினர். இராமலிங்கர் பணிமன்றத்தின் தலைவர் திரு நா. மகாலிங்கம் அவர்கள், விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்துகையில் :

"தமிழ்நாட்டின் பழைய வரலாற்றில் பல முதலமைச்சர்கள் இலக்கியம் படைக்கிறவர்களாக இருந்திருக்கிறார்கள். மாணிக்கவாசகர் முதலமைச்சராக இருந்தவர்தான். திருவாசகத்தைப் படைத்துத் தந்திருக்கிறார். சேக்கிழார் முதல் அமைச்சராக இருந்தவர்தான். அவர் பெரியபுராணத்தை அருளினார். தாயுமானவர் முதலமைச்சராக இருந்து நல்ல இலக்கியம் தந்திருக்கிறார். அந்தச் சிறந்த சரித்திரத்தைத் தொடர்ந்து பார்த்தால் அவர்களுக்கெல்லாம் பிறகு கவிதையாத்துப் பாடும் முதலமைச்சராக நமது டாக்டர் கலைஞர் விளங்குகின்றார். ஓய்வு நேரங்களில் சிறந்த இலக்கியங்களை அவர் படைத்துத் தரவேண்டும்,

மாணிக்கவாசகர் — சேக்கிழார் — தாயுமானவர் போன்றோருக்கு இணையாக விளங்க வேண்டும். காந்தியடிகளும்—தென்னாட்டுக் காந்தி அண்ணாவும் விரும்பியதற்கேற்ப, ஏழ்மையில் வாடும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்க நமது முதல்வர் அவர்கள், அரும்பாடுபட்டுச் சிறந்த முயற்சி எடுத்து வருகிறார்கள்'' என்று குறிப்பிட்டு, அனைவரையும் வரவேற்று மகிழ்வித்தார்.

விழாவுக்குத் தலைமையேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மேற்குறித்த நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் திரு. வன்மீகநாதன், திரு. ஊரன் அடிகள், திரு. எஸ். டி. சுந்தரம் ஆகியவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டி, நிகழ்த்திய சிறப்புரையின் சுருக்கம் வருமாறு :

"மூன்று சிறந்த நூல்களை இந்த விழாவிலே வெளியிட்டு, சிறப்புக்குரிய மூவர் மூலம் அவற்றை வெளியிடச்செய்து, அருமையான உரை நிகழ்த்தி—நம்மையெல்லாம் தமிழ்க் கடலில் மூழ்கடித்திருக்கிறார்கள். முத்தமிழ்க் காவலர் திரு, கி. ஆ, பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இப்படிப்பட்ட மாலை நேரங்கள் நமக்கு வாய்ப்பது மிகஅரிதுதான்.

இதுபோன்ற மாலை நேரங்களை நாம் தேடிப் பெற்றாக வேண்டும் என்ற அளவுக்கு இன்றைய நிகழ்ச்சி சிறப்புற அமைந்திருக்கின்றது. உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையும்—வடலூர் வள்ளலார் விழாவையும் ஒன்றாக இணைத்துக் கடந்த ஏழு எட்டு நாட்களாக இங்குச், சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். அரிய சொற்பொழிவுகளும்—கவியரங்கங்களும் நிகழ்வுற்றிருக்கின்றன. இராமலிங்கர் என்னென்ன கருத்துக்களை நாட்டில் பரவிடவேண்டும் என்று விரும்பினார் என்பதை எடுத்தியம்புகின்ற அதே நேரத்தில் திரு. தெ. பொ. மீ. அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல், ஒன்றைக் கவனிக்கவேண்டும். அந்தக் கருத்துக்களைப் பரவச்செய்ய வேண்டும் என்ற வேளையில்—அந்தக் கருத்துக்களின் வழியே நடைபோடவேண்டும் என்ற வேளையில்—நாடும் பங்கு பற்ற முன்வந்தா என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது, என்பதை மறக்கக் கூடாது.

இராமலிங்க அடிகள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள், ஏற்கனவே வள்ளுவப் பெருந்தகையால் எடுத்துச்சொல்லப்பட்டு, மக்கள் உள்ளத்தில் பதியவைத்துக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட கருத்துக்கள்தான். என்றாலும், இராமலிங்க அடிகள் தமக்கே உரிய சொல் வன்மையால், அரிய பாடல்கள் மூலம் அந்தக் கருத்துக்களை அழகுற வடித்துத் தந்திருக்கிறார்.

சித்து விளையாட்டு

இராமலிங்க அடிகளார், 184 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் பிறந்து, ஐம்பது ஆண்டு காலம் தமிழகத்தில் இருக்கும் பேற்றினைப் பெற்று வாழ்ந்து—இயற்கையடைந்தாகள்—மறைந்தார்கள்—அல்லது ஆண்டவனோடு கலந்தார்கள். இவ்வாறு எப்படிச் சொன்னாலும், அவர் இன்று நம்மிடையே இல்லை. அவர்கள் இல்லை என்று சொல்லுகின்ற நேரத்தில், அவர் இருக்கிறார் என்றும் நான் சொல்லுகிறேன். என்ன இது புதுக் குழப்பம் என்று நீங்கள் கேட்கலாம். இராமலிங்க அடிகளே, "நான் மறைகிறேன்" என்றும், "மறைய மாட்டேன் வருவேன்'' என்றும் சொன்னார். இதை நான் திரு. கி. ஆ. பெ. அவர்கள் சொன்னதுபோல் சித்து விளையாடல் என்று சொல்லாவிட்டாலும், இராமலிங்க அடிகள் எழுத்துக்களில் இருக்கிறார் —அருட்பாவாய் இருக்கிறார் — கருத்துக்கள் வாயிலாக நம்மிடையே வாழ்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். பெரியவர்கள் மறைவதில்லை. அவர்கள் என்றும் வாழ்கிறார்கள் கருத்துக்கள் வாழ்கின்ற வரையில், அவர்கள் வாழ்கிறார்கள். அந்த அடிப்படையில் வள்ளுவரும், காந்தியடிகளும், வள்ளலாரும், நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கி. ஆ. பெ. அவர்கள் பேசும்போது, இராமலிங்க அடிகள் கடுமையான நாத்திகர்களுக்கும் - ஆத்திகர்களுக்குமிடையே அவர்களை ஒன்று சேர்க்கும் பாலமாக இருந்தார் என்று குறிப்பிட்டார், அவர் எந்தத் துருவத்திலிருந்து வருகிறார் என்று குறிப்பிடவில்லை. நானும் அவரும் அந்தப் பாலத்தின் இரு கண்மாய்களாய் இருக்கலாம். ஒன்பது வயதில் இராமலிங்க அடிகள் எப்படிப் பாடியிருக்கக்

கூடும் என்று கேட்டு, அது சித்து விளையாட்டு என்று அவர் விளக்கினார். பாமர மக்கள் அவரது பாடல்களில் மெய்ம் மறந்ததாகவும் கூறினார்.

வடலூர்ச் சன்மார்க்க சங்கத்திற்குப் பலர் பட்டாக்களை நிலக் கொடையாக வழங்கியிருக்கிறார்கள் என்ற விவரத்தைப் புத்தகத்திலே பார்த்தேன். அருணாசல ஐயர், கொன்னப்பசி, குப்பம்பசி, சின்னான்பசி, தம்பிப்பசி, ஆனைப் பசி போன்றோரால், நிலக்கொடை தரப்பட்டிருக்கிறது. நாம் இப்படிப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என்றுதான், நிலமில்லாதவர்களுக்கு நிலப்பட்டா வழங்க வேண்டுமெனும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம்.

ஒரு காணி—இரண்டு காணி நிலத்தையெல்லாம் தந்தார்கள் என்றால் அவர்களெல்லாம் பட்டதாரிகளல்ல; பணக்காரர்களல்ல; மேதைகளல்ல; கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள்தான், இதில் அதிகமாக இருந்திருக்கிறார்கள். படிக்கத் தெரியாதவர்கள்—பாமரர்கள் உள்ளத்திலும்கூட, பசி நீக்கும் நல்ல காரியத்திற்குக் கொடை வழங்க வேண்டும் என்ற முறையில் வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயிகள், தங்கள் நிலத்தின் ஒரு பகுதி விளைச்சலையே, சத்திய ஞான சபைக்கு வழங்கி வருகிறார்கள் என்று, திரு. மகாலிங்கம் அவர்கள் தெரிவித்தார்கள்.

வள்ளலார் வழியை அதிகமாகக் கடைப்பிடித்து நடக்கிறவர்கள் யார் என்றால், ஏழை எளிய—பாமர மக்கள்தான், அவர் வழியைப் பின்பற்றி நடக்கிறார்கள். எவ்வளவு பெரிய நூலானாலும்— கருத்துக்களானாலும்—எண்ணங்களானாலும் அவற்றைப் பாராட்டும் தன்மை இல்லாமல் இருந்தது. பாராட்டுக்குரியவர்கள் இப்படிப்பட்ட வித்தகர்கள்—சித்து விளையாட்டுக்காரர்கள் என்று சொன்னால்தான், அந்தக் காலத்து மக்கள் உன்னிப்பாகக் கவனம் செலுத்துவார் என்று எழுதியவர்கள்மீது கதைகள் சுமத்தப்பட்டன.

ஒன்பது வயதில் பாட முடியுமா?—ஐந்து வயது பாலகனால் பாட முடியுமா? என்று நான் கேட்டால், பழைய விஷயத்தை மீண்டும் பேசுவதாகக் கருதக்கூடும். என் மாணவப் பருவத்தில், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. அவர்கள் பேசிய பகுத்தறிவுக் கருத்துக்களைக் கேட்டு, அவர் பாசறையில் தயாரானவன் நான். அண்ணா—பெரியார் சொற்பொழிவுகளைப்போல் முத்தமிழ்க் காவலரின் சொற்பொழிவும் எனக்குப் பிடித்தமானதாகும். அவர் பேச்சு என் கருத்துக்கு முரணாக இருக்குமானால், அவர்கள் முதலில் பேசிய கருத்துக்கள்தான் அதற்குக் காரணமாகும். ஐந்து வயது பாலகன் பாடினான்—ஒன்பது வயது சிறுவன் பாடினான் என்றால்தான், பாட்டைப் படிப்பார்கள்—பிறகு கருத்துக்கள் நுழையும். கருத்துக்களைப் புரிய வைக்கப் பாட்டை எழுதியவர்களின்மீது சிறப்புக்களைச் சுமத்தி விடுகிறார்கள். இராமலிங்க வள்ளலார் ''கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக'' எனப்பாடினார். அதில் எவ்வளவு பகுத்தறிவுக் கருத்துக்கள்—ஆழ்ந்த சிந்தனைகள் இருக்கின்றன என்பதை மறக்க முடியாது.

பிச்சைக்காரர்களைப் பற்றி இன்று நாம் சிந்திக்கிறோம் என்றாலும், வள்ளுவர் 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' என்று எழுதினார், வள்ளலாரோ 'வாடியபயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார், இரப்போரை—இல்லாதாரை—வறியோரைக்கண்ட போதெல்லாம், அவர்களது பசியைப் போக்க வேண்டும் என்று துணிந்து சொல்லிப் பசி போக்க முயற்சி எடுத்துக் கொண்டார்.

திருவள்ளுவர் வாக்கின்படி வள்ளலார் வாழ்ந்து முயற்சிகளை மேற்கொண்டார். இன்று அவர் வழிநின்று தமிழக அரசு அந்த எண்ணங்களை நிறைவேற்றி வருகிறது. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று விவசாயக்குடி மகனோ—குடியானவனோ—நிலக்கிழாரோ பயிரைப் பார்த்துச் சொல்லவில்லை. 'வாடிய பயிர்' என்று வள்ளலார் பாடியது உயிர்களைத்தான்; பிச்சைக்காரர்களைத்தான் சொன்னார். அதைச் செயலாக்கும் கட்டத்தில்தான் நாங்கள் இருக்கிறோம். இந்த விழாவுக்கு வருமுன், இராஜாஜி மண்டபத்தில் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு நிதியைப் பெற்றுக்கொண்டு, இங்கே வருகிறேன். செயலை முந்திச் செய்து

விட்டு, சொல்லைப் பிந்தி வைத்துக் கொள்ளும் விதத்தில், இராமலிங்கரின் கருத்துக்களைப் பின்பற்றி வருகிறோம். அதற்கு உங்களது ஒத்துழைப்புத் தேவை :

கருத்துக்களை வாழவைக்க வேண்டும் :

கவிஞர் திரு எஸ். டி. சுந்தரம் எழுதிய 'காந்தியுகம்' என்ற நூலை வெளியிட்டுத் தூரன் உரையாற்றினார். வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய தவத்திரு ஊரன் அடிகள், இராமலிங்க அடிகளைப்போல் இளமைக் காலத்திலேயே துறவறம் பூண்டவர்கள் என்றார்கள். சிலர் இரண்டு முறை துறவறம் மேற்கொள்வதுண்டு. முதலில் இல்லறத்தைத் துறப்பார்கள்—பிறகு துறவறத்தையே துறந்து விடுவார்கள். வள்ளலாரின் இந்த அருமையான வரலாற்று நூல் ஆராய்ந்து தெளிந்திட வேண்டிய நூலாகும். தண்ணீரை ஊற்றி விளக்கெரிய வைத்தார் என்று எழுதி, அதையெல்லாம் அவர்களால்தான் முடியும் என்று சொல்லுவதே கூட, முன்பு சொன்ன கருத்துக்கு மாறானதாக அமைந்துவிடும்.

புலால் உண்ணாமை என்பது, மகாத்மா காந்தியடிகளால்தான் முடியும் என்று சொல்லி விட்டு, நாம் தப்பித்துக் கொள்கிறோம். விழாவுக்குரியவர்களுக்குச் சிறப்புத் தந்து விட்டு, அவர்கள் சொன்ன கருத்துக்களைக் கடைப்பிடிக்காமல், தப்பித்துக் கொள்ளும் நிலை இருக்கக் கூடாது. கருத்துக்களுக்கு மதிப்பு இல்லாமல், ஆட்களுக்குப் பெருமையை அதிகப் படுத்தி, அவர்களின் கருத்துக்களைக் கொன்று கொண்டே இருக்கிறோம். ஆகவே கருத்துக்களை வாழவைக்க வேண்டும். இப்படிச் சொல்வதனால், இராமலிங்க அடிகளின் பெருமையை—புகழை—கீர்த்தியை மறக்க வேண்டும் என்று விரும்புகிறவன் அல்ல. காலையில் மாணிக்க வேலர் அவர்கள் எனக்கொரு கடிதத்தை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில் 'வள்ளலார் நகர்' என்று ஏழு கிணறு பகுதிக்குப் பெயர் வைக்கவேண்டுமென்றும்—தங்கசாலைப் பஸ் நிலையத்திற்கு 'வள்ளலார் பேருந்து நிலையம்' என்று பெயர் வைக்க வேண்டும்' என்றும் இருந்தது. இங்கேயும் அதையே துண்டறிக்கையாக வெளியிட்டு, அந்தக் கோரிக்கையை என்னிடம் தந்திருக்கிறார்கள். இருபது காசுத் தபால்தலை ஒட்டி, இதை முதலமைச்சருக்கு அனுப்புங்கள் என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள், இதெல்லாம் வீணான செலவு. வீணான செலவு என்பதற்கு, இரண்டு பொருள்களைக் கொள்ளலாம். எவ்வளவுதான் செலவு செய்தாலும் காரியம் நடக்காது என்றும் கொள்ளலாம். இவ்வளவு கஷ்டப்படாமல், என்னை அழைத்து ஒரு வார்த்தை சொன்னாலே போதுமே என்றும் கொள்ளலாம்.

காலையிலேயே இதைப்பற்றி அறிவிக்கலாம் என்று கருதியிருந்தேன். இங்கே வந்தபிறகு சந்தனப்பெட்டியில் வைத்துக் கோரிக்கையைத் தந்திருக்கிறார்கள். மாநகராட்சி மூலம், ஏழு கிணறு பகுதிக்கு 'வள்ளலார் நகர்' என்று பெயர் வைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேருந்து நிலையத்திற்கும் பெயர் மாற்றப்படும். தமிழ்ப் பெயர்களை—தமிழ்ச் சான்றோர்களின் பெயர்களை வைப்பதில் இந்த அரசுக்கு நிகர் வேறில்லை. ஆனால் இப்படி பெயர் வைப்பதைத் தவிர, இந்த அரசுக்கு வேறு என்னவேலை என்று எங்களைப் பார்த்துக் கேட்பதிலிருந்து எங்களைக் காப்பாற்ற நீங்கள் உறுதுணை புரிய வேண்டும் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டு, நமது முதல்வர் அவர்கள் அரியதோர் இனிய சிறப்புரை ஆற்றினார்கள்.

அப்போது, இராமலிங்க வள்ளலார் சென்னையில் வாழ்ந்த ஏழு கிணற்றுப் பகுதி இனி வள்ளலார் நகர் என்றும், தங்கசாலைப் பேருந்து நிலையம் வள்ளலார் பேருந்து நிலையம் என்றும் பெயர் மாற்றம் பெறும் எனத் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தமை, பக்தர்கள் அனைவருக்கும் தேனும் பாலுமாய்த் தித்திக்கும் இனிய நற்செய்தியாகும்.

— ஆசிரியர்

—x—

மோகனூர்க் காந்தமலை பாலதண்டாயுதபாணிசுவாமி கோயிலின், கல்யாண மண்டபக் கால்கோள் விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்களுக்கு அறங்காவலர் குழுத்தலைவர் திரு. அருணகிரி, B.Com. அவர்கள் வரவேற்புரை வாசித்தளித்தல்



மோகனூர் அசலதீபேசுவரர் கோயிலின் திருப்பணித் துவக்க விழாவில், திரு. கந்தசாமி திரு: முத்துசாமி, B.A.B.T.,M.P. திரு, எஸ். எம். கிருஷ்ணன், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு, திரு. மு. கண்ணப்பன், திரு. சி. வி. வேலப்பன், M L A. முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



சென்னை சைதாப்பேட்டைத் திருக்காரணீசுவரர் கோயிலின் தேர் நிலையக் கட்டிடத்திற்கு மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டுதல் (2—9—71).

திருப்புன்கூர்ச் சிவலோகநாத சுவாமி கோயில் திருப்பணியை மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் துவக்கி வைத்தல் (25—8—71)

பிள்ளையுலகாசிரியர்

பிள்ளை லோகாசாரியர் என்னும் பெரியார், நம்பிள்ளைக்கு மாணுக்கரும், திருவாய் மொழிக்குப்பகவத்விஷயம்என்று எல்லாராலும் கொண்டாடப்பெறும் ஈடு முப்பத்தாருயிரப்படி என்னும் வியாக்கியானத்தைச் செய்தவரும், மகாவிரக்தருமான வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளையினுடைய மூத்தகுமாரர். வடக்குத் திருவீதிப் பிள்ளை, தம்முடைய ஆசாரியராகிய நம் பிள்ளையை, முதலியாண்டான் திருவம்சத்தில் தோன்றி ஆசாரியராகப் புகழ்பெற்றிருந்த கந்தாடைத் தோழப்பர் என்பவர், வியந்து போற்றி வழங்கிய லோகாசாரியர் என்னும் சிறப்புத் திருப்பெயரையே, குருபக்தியும் நன்றியுணர்வும் கொண்டு தமது புதல்வருக்கு இட்டு வழங்கி மகிழ்ந்தார். நம்பிள்ளையாகிய லோகாசாரியருக்கும், இவருக்குமிடையே வேறுபாடு அறிதற்பொருட்டு, இவர் பிள்ளை லோகாசாரியர் என்று புகழ்ந்து போற்றப்பெற்ருர். இச்செய்தி,

''துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால்
என்னவுல காரியனே வென்றுரைக்க-பின்னை
உலகா ரியனெனும்பேர் நம்பிள்ளைக் கோங்கி
விலகாமல் நின்ற தென்றும்மேல்''

''பின்னைவடக்குத் திருவீதிப்பிள்ளை அன்பால்
அன்ன திருநாமத்தையா தரித்து-மன்னுபுகழ்
மைந்தருக்குச் சாத்துகையால்வந்து பரந்தது எங்கும்
இந்தத் திருநாமம் இங்கு''

திரு. 3

எனவரும் உபதேச ரத்தினமாலைச் செய்யுட்களால் விளங்கும். இவருடைய திருத்தங்கையார் ஸ்ரீரங்கநாச்சியார். அழகிய மணவாளப் பெருமாள்நாயனர் இவர் திருத்தம்பியார். இவர் ''வன்பெரு வானகம் உய்ய அமரர் உய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசர் உய்யத் துன்ப மிகுதுயர் அகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகம்மகிழும் தொண்டர் வாழ அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன்'' திருவரங்கத்தில் அவதரித்தவர்; அவ்வூரிலேயே வடக்குத் திருவீதியில் நித்திய வாசம் செய்தவர்; பிரமசரிய நிலையினர்.

இவருக்கு ஆசாரியர் நம்பிள்ளை. திருவாய்மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்கள், ஈடு முதலான வியாக்கியானங்கள், ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்களை இவருக்குச் சாதித்தவர், இவர்தம் திருத்தமப்பனுரான வடக்குத் திருவீதிப்பிள்ளை.

இவருக்கு மாணுக்கர்கள்: கூரகுலோத்தம தாசர், திருவாய் மொழிப்பிள்ளை, விளாஞ்சோலைப் பிள்ளை, மணல்பாக்கத்து நம்பியார், திகழக் கிடந்தார் அண்ணன் முதலாயினேர்.

இவர் இவ்வுலகத்தை அலங்கரித்துக் கொண்டு எழுந்தருளியிருந்த காலம் பதினுன்காம் நூற்ருண்டு.

அருளிச்செய்த நூல்கள் :

1. தனிப்பிரணவம் : பெரிய திருமந்திர மான திருவெட்டழுத்தின் பொருளை விவரித்து உரைப்பது.

2. தனித்துவயம் : மந்திரரத்தினமான துவயத்தின் பொருளை விவரித்து உரைப்பது.

3. தனிச்சரமம் : சரமச் சுலோகத்தின் பொருளை விவரித்து உரைப்பது.

4. யாத்ருச்சிகப்படி : திருமந்திரம், துவயம், சரமச்சுலோகம் என்னும் மூன்று மந்திரங்களின் பொருள்களைச் சுருக்கமாகக் கூறுவது.

5. பரந்தபடி : மேற்கூறிய மூன்று மந்திரங்களின் பொருள்களையே மிகமிக விரிவாகப் பேசுவது. இவ்வுரையில் நாம் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

6. ஸ்ரீய: பதிபடி : மேற்கூறிய மூன்று மந்திரங்களின் பொருள்களையே மிகச் சுருக்கமும் இன்றி மிக விரிவும் இன்றி இடை நிகர்த்ததாய்ப் பேசிக் கொண்டு செல்வது. ஆனால், இதில் வடசொற்கள் மிக அதிகம்.

7. முமுட்சுப்படி : மேற்கூறிய மூன்று மந்திரங்களின் பொருள்களையே சூத்திரவடிவில் மிகச் சுருக்கமும் இன்றி மிக விரிவும் இன்றி வடமொழிக்கலப்பும் அதிகம் இன்றிப் பத்து வகை அழகும் பொருந்தக் கூறுவது. மிக அரியதொரு நூல். இதற்கு மணவாள மாமுனிகள் வியாக்கியானம் அமைந்திருக்கிறது. இவற்றுள் யாத்ருச்சிகப்படி, ஸ்ரீய:பதிபடி, முமுட்சுப்படி இம்மூன்றும் முதற்குறிப்பால் பெயர் பெற்றவை. பரந்தபடி தன்மையாற் பெயர் பெற்றது.

8. தத்துவத்திரயம் : சித்து அசித்து ஈச்வரன் என்னும் தத்துவங்கள் மூன்றனுடைய விளக்கத்தை விவரித்துக் கூறுவது. சூத்திர யாப்பில் அமைந்தது. இதற்கு மணவாள மாமுனிகளுடைய வியாக்கியானம் அமைந்திருக்கின்றது.

9. அர்த்தபஞ்சகம் : ஐந்து பொருள்களின் தன்மையைப் பற்றி விரித்துக் கூறுவதால் இப் பெயர் பெற்றது. 'ஐந்துபொருள்களின் தன்மைகளாவன : தன்னுடைய தன்மை, இறைவனுடைய தன்மை, தான் பெறும் பயனை அடைவிக்கும் வழியின் தன்மை, பயனை அடைய ஒட்டாமல் தடுக்கும் தடையின் தன்மை, பேற்றின் தன்மை என்பனவாம். ''மிக்க இறைநிலையும், மெய்யாம் உயர் நிலையும், தக்க நெறியும், தடையாகித் தொக்கியலும் ஊழ் வினையும், வாழ்வினையும், ஓதும் குருகையர் கோன் யாழின் இசை வேதத்து இயல்'' என்பது பராசர பட்டர் பாசுரம்.

10. தத்துவ சேகரம்: திருமகள் கேள்வனே பரம்பொருள் என்பதனை, வேதம் முதலிய பல நூல்களிலிருந்து பிரமாணங்கள் காட்டி உறுதிப் படுத்துவது. தத்துவம்---திருமால். சேகரம்-- ஓர் அணி விசேடம். இதனுள் உயிர் நிலை முதலிய ஏனைய பொருள்களின் தன்மைகள் கூறப்பட்டிருப்பினும் இறைநிலை கூறுதலே மிகுதியாதலின், இப்பெயர் பெற்றது. இதனை 'இறையனுர்களவியல்' என்று பெயர் அமைந்தது போன்று கொள்க.

11. பிரபந்ந பரித்ராணம் : தன்னை அடைந்தவர்களைப் பாதுகாத்தல் திருமகள் கேள்வன் ஒருவனுக்கே இயல்பாய் அமைந்தது; ஏனையோர் காத்தற்கு உரியர் அல்லர் என்பதனைப் பல உதாரணங்கள் காட்டி மக்களுடைய மருட்சியைப் போக்கும் ஓர் உயரிய நூல்.

12. நவவித சம்பந்தம் : இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள பிதாபுத்திர, இரக்ஷக இரக்ஷ்ய, சேஷ சேஷி, பர்த்துரு பார்யா, ஞாத்ரு ஞேய, ஸ்வ ஸ்வாமி, ஆதார ஆதேய, சரீர சரீரி, போக்துரு போக்கிய என்ற ஒன்பது வகைப்பட்ட சம்பந்தங்களை விளக்கிக் கூறும் நூல்.

13. நவரத்தினமாலை : ஒன்பது வித இரத்தினங்களாலாய மாலை போன்று ஒன்பது வகையான பொருள்களைப் பற்றிக் கூறுவது. அதாவது, தன்னையும் தனக்குப் பகையாய் நிற்கும் உடலையும் உடலினைப்பற்றி நிற்கும் உறவினர்களையும் உண்மை ஞானம் இன்றி வினையியல்

பிறப்பிலே அழுந்திக் கிடக்கும் மக்களையும் பிற தெய்வங்களையும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் ஆசாரியனையும் பிராட்டியையும் இறைவனையும் ஆக, ஒன்பதின்மர்களையும் ஒருவன் நினைத்திருக்க வேண்டிய விதத்தைத் தெளிவாகக் கூறுவது.

14. **சாரசங்கிரகம்:** சாரமான துவயத்தின் பொருளைச் சுருக்கிக் கூறுகின்ற காரணம் பற்றி இந்நூலுக்கு இப்பெயர் அமைந்தது. துவயம் வேதசாரம் எனப்படும். அதில் பத்துப் பதங்கள் உள்ளன ; அந்தப் பத்துப் பதங்களின் பொருள்களையும், திருவாய்மொழியில் உள்ள பத்துகளுள் ஒவ்வொரு பத்திற்கு ஒவ்வொரு பொருளாக நிரலே சேர்த்து அமைத்துக் கூறுவது.

15. **பிரமேயசேகரம்:** இறைவனுடைய திருவருளைப் பெற்ற ஓர் உயிர் அடையத்தக்க பயன், இறைவனுடைய திருவடிகளில் செய்யும் தொண்டே என்பதனை முறைப்படி விளக்கிக் கூறுவது. பிரமேயம்—பிரமாணத்தால் அறியப்படுவது. இங்குப் பிரமாணம் என்பது உண்மையறிவினைப் பிறப்பிக்கும் நூல்களைக் குறிக்கின்றது.

16. **சம்சார சாம்ராஜ்யம்:** இதற்குச் சம்சாரமாகிய அரசியலைப் பற்றிக் கூறுவது என்பது பொருள் : அரசனுக்குப் படை வீடுபோல்வது இறைவனுக்கு இந்த உடல். இது முற்று நவகம் இந்த உடலில் இருந்துகொண்டு அரசு புரியும் ஆன்மாவைத் தன்னுடைய திருவருளாலே தன்னிடதில் திருத்திச் சேர்த்துக்கொள்ளுவான் இறைவன் என்று இறைவனுடைய திருவருளை விரித்துக் கூறுகின்றது.

17. **அர்ச்சிராதி கதி:** இது ஆன்மா 'அர்ச்சிஸ்' எனப்படும் தேவன் முதலான தேவர் பலர் எதிர் கொள்ளப் போகும் வழியானமுத்தி நெறியைப் பற்றி விரித்துக் கூறுமது. பிரமேய சேகரத்தில் சுருங்கக் கூறியதை இந்நூலில் மிக விரித்துப்பேசுகிறார். திருவாய்மொழியில் 'சூழ் சும்பணிவிமுகில்' என்று தொடங்கும் திருப்பதிகம் இந்த அர்ச்சிராதிகதியைப் பற்றிக் கூறுவதேயாம்.

18. **ஸ்ரீவசனபூஷணம்:** இரத்தினங்கள் மிகுந்துள்ள ஆபரணத்திற்கு இரத்தினாபரணம் என்று பெயராமாறு போல, முன்பு இருந்த ஆசாரியர்களுடைய வசனங்களே மிகுதியாய், படிப்பவர்களுக்குப் பேரொளியைத் தருவதாக இருப்பதனால், இந்நூலுக்கு ஸ்ரீவசனபூஷணம் என்று திருப்பெயராயிற்று. இந்நூல் 9 பிரகரணங்களை யுடையதாய், 463 சூத்திரங்களைக் கொண்டு விளங்கும்.

> "முன்னம்குரவோர் மொழிந்த வசனங்கள்
> தன்னைமிகக் கொண்டுகற்றோர் தம்முயிர்க்கு—மின்னணியாச்
> சேரச் சமைத்தவரே சீர்வசனபூடணமென்
> பேர்இக்கலைக்கிட்டார் பின்."
>
> —உபதேசரத்தினமாலை

மேற்குறித்த நூல்களையெல்லாம் ஒரு தொகுதியாக அட்டாதச ரகசியம் (பதினெண் மறைபொருள் நூல்கள்) என வழங்குவர். சைவத்தில் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் இருப்பன போன்று, இவை வைணவ மதத்திற்கு அமைந்திருக்கின்றன, இவற்றில் கூறப்பட்டிருப்பவை முற்றும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களின் கருத்துப் பொருளும், வேதாந்தங்களின் நுண்பொருளுமாகும்.

— ஆசிரியர்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை வைபவம்

'பத்மவிபூஷண்'

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள்,

காஞ்சிபுரம்

ஆனி மாதத்தில் பெரியாழ்வாருடைய திருவவதரர நன்னாளாகிய சுவாதி நட்சத்திரத்தில் இப்பேராசிரியர் அவதரித்தருளினர். ஸ்ரீவசன பூஷணம் முமுட்சுப்படி முதலிய அஷ்டாதச ரகசியங்களை அருளிச் செய்த பிள்ளைலோகாச்சாரியர்க்கும், ஆசார்யஹ்ருதய மருளிச் செய்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனர்க்கும் திருத்தந்தையார் இவர். இவருடைய இயற்பெயர் ஸ்ரீகிருஷ்ணமகாகுரு என்பதாம். இந்தத் திருநாமமே, பெரியவாச்சான் பிள்ளை என்கிற மற்றோர் ஆசிரியர்க்கும் இருந்ததனல், நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்திருந்த இவர்களுக்குள் வாசி தெரிவதற்காக, இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை என வழங்கப்பட்டு வந்தார். திருவரங்கம் பெரிய கோயிலில் வடக்குத் திருவீதியில் இவர் வாழ்ந்து வந்ததுவே, இத் திருநாமத்திற்குக் காரணம்.

இப்பேராசிரியருடைய திவ்வியசரித்திரங்களைப் பற்றி முன்னோர்கள் விசேஷமாக எழுதி வைக்கவில்லையாதலால், இவருடைய ஞானப் பெருமைகளை இங்கு விசேடமாக அநுபவிப் போம். பகவத் விஷயமென வழங்கப்படுகிற, (திருவாய்மொழி வியாக்கியானமான) ஈடுமுப் பத்தாறுயிரப் படியை, இவ்வாசிரியரே பட்டோலை கொண்டவர். உபதேசரத்தினமாலையில், ''தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறி தன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது, ஈடுமுப்பத்தாறுயிரம்'' என்று அருளிய பாசுரத்தின்படி, நம்பிள்ளையின் பகவத் விஷய உபந்யாஸங்களைக் கேட்டுத் திருவுள்ளத்தில் தரித்துக் கொண்டிருந்து அற்புதமாகப் பட்டோலை கொண்ட பெருமை இவ்வாசிரியர்க்கு அசாதாரணமானது. சிலர் கூறுவதாவது, நம்பிள்ளை சோதிவாய் திறந்து அருளிய பங்க்திகள் எப்படியோ அப்படியே, அப்பங்க்திகளே ஈட்டில் அமைக்கப்பட்டன வென்று: இதில் ஔசித்யம் சிறிதுமில்லை. பேச்சு வழக்கு நடை வேறு; நூல் எழுதுகின்ற நடைத்திறன் வேறு, கங்கையாற்றின் பெரு வெள்ளம்போல் நம்பிள்ளையருளிச் செய்தவையாய், கடைகட்டாக் காவேரி என்னும் படியாய் அமைந்த ஸ்ரீஸூக்திகள், அப்படியே ஏடுபடுத்தப்பட முடியாதவை. மகோபந்யாஸங்களில் குறிப்பெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்தது ஈடு. ஈட்டின் பங்க்தி ஸந்நிவேசம் வேறு எந்தக் கிரந்தத்திலும் கண்டறியாததும், காண முடியாததுமான அத்விதீய விலக்ஷண சந்தர்ப்பம். சமஸ்கிருத வித்வான்களும், தமிழ் வித்வான்களும் தனித் தனியே உள்குழையத்தக்க உயர்ந்த ரசநா விசேஷம். ''ககநம் ககநாகாரம் ஸாகரஸ்

ஸாகரோபம:'' என்கிருப்போலே ''ஈட்டுக்கு உவமை ஈடே'' என்ன வேண்டுமத்தனை. மணிப்பிரவாள நடையில் மற்றும் பல ஆசிரியர்களும் எழுதியுள்ளார்கள் எனினும், இவருடைய ரசநாவைகரி தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்து விளங்கும் அழகு, அநுபவ ரசிகர்களுக்கே அறிய எளிது. அர்த்தம் தெரியாமற்போனாலும், பங்க்திஸந்நிவேசத்தைச் சேவித்த மாத்திரத்திலே, இரும்புபோல் வலிய நெஞ்சும் இறையிறையுருகும். பெரிய புலவர்கள் பத்தெட்டு வரிகளில் எழுத வேண்டிய பொருள்களை, ஒரு வரியில் வெகு கம்பீரமாக அடக்கி எழுதுந் திறன் இவ்வாசிரியர்க்கே அமைந்தது.

மணவாள மாமுனிகள் இவ்வாசிரியர்க்கு வள்ளல் என்று விசேஷணம் இட்டு அருளினார். (உதாரர் என்றபடி). ஔதார்யம் மிக்கவர்கள் உலகில் பலர் புகழ் பெற்றிருந்தாலும், இவர் ஒருவருடைய ஔதார்யமே உண்மையில் கொண்டாடத் தக்கதும், ஒப்புயர்வற்றதும் ஆகும். ஏற்கெனவே திருக்குருகைப் பிரான் பிள்ளான் அருளிச் செய்த ஆறாயிரப்படி வியாக்கியானமும், நஞ்சீயர் அருளிச் செய்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானமும் இருந்தாலும், அவை மிகவும் சுருக்கமானவைகள் ஆகையாலே, அநுபவ ரசிகர்களுக்குப் பரிபூர்ண திருப்தியை விளைவிக்கப் போதாதவை. நம்பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவியிடப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த இருபத்தினாலாயிரப்படி வியாக்கியானம், அவைபோலச் சுருக்கம் அன்றிக்கே சிறிது விரிவாகவே இருந்தாலும், ஈடுமுப்பத்தாறாயிரப்படி திருவவதரித்த பின்பு, அதுவும் சுருக்கமே என்னும்படியாயிற்று. அநேக தலங்களில் இருபத்தினாலாயிரப்படி பங்க்திகளும், ஈட்டுப் பங்க்திகளும் ஒற்றுமைப் பட்டிருக்கையாலே, முன்னம் அவதரித்ததான அந்த வியாக்கியானத்தைத் துணைகொண்டே, ஈடு எழுதியருளப்பட்டது எனத் தெரிகின்றது. ஆயினும், ஸ்ரீஸூக்தி காம்பீர்யமும், அர்த்த பௌஷ்கல்யமும், ஈட்டுக்கு அநிதர ஸாதாரணமாயிருப்பது பற்றியே, இதுவே எங்கும் காலக்ஷேபக்ரந்தமாகக் கொள்ளப்பட்டுக் குலாவப் பெறுகின்றது. ஸ்ரீராமாயணம் முதலிய இதிகாச புராணங்களிலிருந்து மேற்கோளாக ஆங்காங்குப் பலபல சுலோகங்களை எடுத்து இனிமையே வடிவெடுத்ததாக வியாக்கியானஞ் செய்தருளும் அழகு ஈட்டுக்குச் சிறந்த அணிகலன்.

திருவிருத்தத்திற்கும் இங்ஙனே ஈடு வியாக்கியானம் அமைந்துள்ளது. அஷ்டச்சுலோகி பெரியபடி வியாக்கியானத்திலே "வடக்குத்திருவீதிப்பிள்ளை அஷ்டாக்ஷர தீபிகையிலே அருளிச் செய்தருளினார்'' என்று காண்கையாலே, அஷ்டாக்ஷரதீபிகை என்கிற கிரந்தமும், இவ்வாசிரியரது கிருதியென்று தெரிய வருகின்றது. (அது லுப்தம்). இப்பேராசிரியருடைய பெருமைகளில் ஒன்றே நாம் உள் குழைந்து போற்றத்தக்கது; அது யாதெனின்; அஃது இவர் உலகுக்கெல்லாம் உயிரான பிள்ளை லோகாசார்யரையும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரையும் பெற்றுக் கொடுத்தருளியதே ஆகும். வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

மகாபாரதம்

(முற்றொடர்ச்சி)

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

மதுசூதனர்

பீஷ்மர் கூறுவார். "உலகங்கட்கெல்லாம் நாதனாகிய இவருடைய நாபிக்கமலத்திலிருந்து பிரமதேவர் உண்டானார். நாராயணருடைய காதுக் குறும்பியிலிருந்து இரண்டு அசுரர்கள் இரு பெருமலைகள் போல் தோன்றி நின்றனர். மதுகைடவர் என்ற பேருள்ள அவர்கள் உலகத்தைத் துன்புறுத்தினார்கள். அவர்களை நாராயணர் தொடைகளில் வைத்துக் கசக்கிக் கொன்றார். எங்கும் அந்த மேதஸ் (கொழுப்பு) நிறைந்தபடியால், இந்தப் பூமி மேதினி என்று பேர் பெற்றது.

வராகமூர்த்தி

இரண்யாட்சன் பூமியைக் கடலில் அழுத்தியபோது நாராயணர் வராகவடிவு எடுத்து, தனது கொம்புகளினால் பூமியை எடுத்து அருள் புரிந்தார்.

நரசிம்மம்

ஐந்துகோடியே எழுபதினாயிரத்து அறுபத்தொரு வருடங்கள் உலகங்கட்குக் கொடுமை செய்த இரண்யனைக் கம்பத்திலிருந்து நரசிங்கமாக வந்து கொன்றார்,

வாமனர்

விரோசனனுடைய மகனாகிய பலி என்ற அசுரன் இந்திராதி தேவர்களையெல்லாம் தன் கீழ் வாழுமாறு செய்து மேம்பட்டு விளங்கினான். அதிதி வயிற்றிலே நாராயணர் தோன்றி வாமனராகச் சென்று மூவடி மண் தானம் பெற்று, ஓங்கி உலகளந்து மாபலியைப் பாதலத்தில் வைத்து உலகங்களின் இடரைத் தீர்த்தருளினார் தத்தாத்ரேயர் அத்திரி முனிவர் தவத்தால் அநசூயைக்குப் புதல்வராகப் பிறந்த தத்தாத்திரேயர் என்ற திருநாமத்துடன் விளங்கி உலகிலே ஒழுக்கமும் வேத நெறிகளும் தழைக்குமாறு செய்தருளினார். கார்த்தவீரியனுக்கு வரங்களைத் தந்தார்.

பரசுராமர்

உலகிலே பல அரசர்கள் அகங்கரித்து அற நெறியினின்றும் வழுவிய காலத்தில், ஜமதக்கினி முனிவருக்குக் குமாரராகப் பிறந்து ராமர் என்ற நாமத்துடன் திகழ்ந்தார். சிவபெருமானிடம் பரசு என்ற ஆயுதம் பெற்ற அவர் கார்த்தவீரியன் முதலிய அரசர்களைக் கொன்றார். ஆறு லட்சத்து நாற்பதினாயிரம் மன்னர்களை வென்றார். ஆயிரம் ஆயிரம் வேந்தர்களைக் கொன்றார். இருபத்தொரு

தலைமுறை சூரிய குலத்தை அழித்தார். இரத்தத்தினால் ஐந்து மடுக்களையுண்டாக்கினார். அதில் முழுகிப் பிதிர்த் தர்ப்பணஞ்செய்தார்.

இராமர்

பின்னர்: தசரத ராசகுமாரனாகத்தோன்றி ராமநாமத்துடன், கோதண்டம் ஏந்தி, இராவணாதியரக்கர்களை மாய்த்து தருமத்தை நிறுவியருளினார். இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் வசுதேவ குமாரனாக இவர் அவதரித்தார். இனி விஷ்ணுயசஸ் என்று பேர் பெற்ற கல்கியாக அவதரிக்கப் போகின்றார்.

சிசுபால வதம்

இவற்றையெல்லாம் கேட்ட சிசுபாலன் சேனைகளுடன் போருக்குப் புறப்பட்டான். பீமன் அவனைக் கொல்லுவதற்கு எழுந்தான்; பீஷ்மர் தடுத்து, ''பீமா! அவனைக் கண்ணபிரான் கொல்லுவார். வசுதேவரின் தமக்கையின் வயிற்றில் சிசுபாலன் மூன்று கண்களுடனும் நான்கு கைகளுடனும் பிறந்தான். இந்த வடிவைக் கண்டு தாய் தந்தையர் அஞ்சினர்கள். 'எவன் தொடுவதனால் இவனுடைய ஒரு கண்ணும் இரு கைகளும் மறையுமோ அவனால் இவனுக்கு மரணம் வரும்' என்று வானொலி எழுந்தது. பல அரசர்களையழைத்து இவனை மடியில் வைத்து ஆசீர்வதிக்கச் செய்தார்கள். கண்ணபிரான் தொட்டவுடன் ஒரு கண் மறைந்தது; இரு கைகள் கீழே விழுந்தன. இவன்தாய் ''கண்ணா! நீ தான் என் மகனுக்கு இயமனா? இவன் நூறு குற்றம் புரிகின்றவரையிற் பொறுத்துக்கொள்'' என்று வரம் கேட்டாள். அத்தைக்கு அந்த வரத்தை வாசுதேவர் வழங்கினார். ஆகவே பீமா! இவனுடைய குற்றங்களைக் கண்ணபிரான் எண்ணிக்கொண்டிருக்கின்றார். சிறிது நேரத்தில் இந்த மூடன் விளக்கில் விழுந்த விட்டிற் பூச்சியைப்போல் மாண்டு போவான்'' என்றார்.

கிருஷ்ணரை நிந்தனை செய்து கொண்டேயிருந்தபோது சில மன்னர்கள் அவனுக்கு உதவியாக நின்றார்கள். பகவான், மன்னர்களே! வீணே நீங்கள் மடிந்து போக வேண்டாம். எனக்கு இருவகை நிச்சயம் இருக்கின்றது. ஒன்று யாகத்துக்கு இடையூறு செய்பவர்களைக் கொல்வது; மற்றொன்று என் அன்பர்களான பாண்டவர்களின் பகைவர்களைக் கொல்வது. இவன் வீண் கர்வம் பிடித்தவன். இவன் எனது அத்தைக்கு மகனாக இருந்தும் யது குலத்தைப் பகைக்கின்றான்'' என்றார். அரசர்கள் போரிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

சிசுபாலன் தன் பரிவாரங்களுடன் சிங்கம் போல் முழங்கிக்கொண்டு போருக்குப் புறப்பட்டான். அப்போது அநேக துர் நிமித்தங்கள் உண்டாயின. கண்ணபிரானுக்கும் அவனுக்கும் நெடும்போர் நிகழ்ந்தது, சக்ராயுதத்தால் சிசுபாலனது சிரத்தைச் சேதித்தார். சேதி நாட்டுத் தமகோஷன் மகனாகிய சிசுபாலனுடைய உடம்பில் இருந்து ஒரு ஒளி கிளம்பி வந்து கிருஷ்ணருடைய திருமேனியிற் சேர்ந்து மறைந்தது. இந்த அதிசயத்தை அனைவரும் கண்டு ஆ! ஆ!! என்று ஆச்சரியம் அடைந்தார்கள்.

தருமர் தன் சிறிய தாயாருடைய மகனாகிய சிசுபாலனுக்குத் தம்பியர்கள் மூலம் இறுதிக்கடன் செய்வித்தார். யாகம் நடக்கின்ற போது ஒரு லட்சம் அந்தணர்கள் உணவு உண்டதற்கு அடையாளமாகச் சங்கினுடைய பெரிய ஒலி எழுந்தது. அப்படியான ஒலி அடிக்கடி கேட்கப்பட்டது. பால், தயிர், நெய், பாயசம் இவைகள் வாய்க்கால் மாதிரி காணப்பட்டன. இது போன்ற வேள்வி வேறு எங்கும் யாரும் செய்ததில்லையென்று கூறிக் கொண்டார்கள். ஏராளமான தான தருமங்கள் செய்யப்பட்டன. பாற்கடல் கொணர்ந்து தந்த நவரத்னமயமான சங்கு நீரால் கிருஷ்ணர் தருமரை அபிஷேகம் செய்தார். யாக முடிவில் தருமர் அவபிரதஸ்நானஞ் செய்து, வியாசர் தவுமியர் வசிட்டர் நாரதர் யாக்ஞவல்கியர் முதலிய முனிவர்களைப் பணிந்தார்.

தருமர், கண்ணபிரானைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, எம்பிரானே! உன்னருளால் இந்த மகத்தான வேள்வி இனிது நிறைவேறியது என்று நன்றியுரை நவின்றார். ''சாம்ராட்'' என்ற பட்டத்தைத் தருமர்

பெற்றார். வந்த அரசர்கள் அனைவர்களும் பாண்டவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களைச் சிறிது தூரம் பின் சென்று வழியனுப்பினார்கள். கண்ணபிரானும் விடைபெற்றுத் துவாரகை சென்றார்.

துரியோதனன் அடைந்த அவமானம்

தருமர் நகரில் நுழைந்து அரசவைக்கு எழுந்தருளினார். துரியோதனன் தனது துணைவர்களுடன் அம்மாமண்டபத்தைக் காண வந்தான். குளம் இல்லா இடத்தில் குளம் என்று வேட்டியை இடைவரைக்குந் தூக்கிக் கொண்டான். மேடு பள்ளம் தெரியாமல் தடுமாறிப் பலமுறை கீழே விழுந்தான். பளிங்கின் வேலைப்பாடுகள் அவனை மயக்கின. குளம் உள்ள இடத்தில் தெரியாது வீழ்ந்தான், பீமனும் திரௌபதியும் மற்றையோரும் சிரித்தார்கள். பெரிய கதவு வலிமையாகத் திறக்க வேண்டும் என்று திறந்து கீழே விழுந்தான். (அது எளிதாகத் திறக்கக் கூடியது). கண்ணாடிக்குள் தெரியும் வழியை வழியென்று கண்ணாடியில் மோதிக் கொண்டான். தருமர் அவர்கட்கு இங்கிதமான இனிய நல்லுரை கூறி உயர்ந்த ஆடை அணி கலன்களைக் கொடுத்து உபசரித்து அனுப்பினார்.

வியாசர் கூறியது

வியாசரைத் தருமர் தனிமையில் சந்தித்து, 'சுவாமி! நாரதர் என் பொருட்டு உலகில், அரசர்கள் அனைவரும் அழிவார்கள் என்று கூறினர், நான் செய்த வேள்வியில் சிசுபாலன் தன் பரிவாரங்களுடன் மாண்டானே. அது அத்துடன் முடிந்ததா?'' என்று கேட்டார். வியாசர், ''அரசனே! சிவமூர்த்தி திரிசூலம் ஏந்தி விடைமீது ஏறிக்கொண்டு இடையறாது தென்திசை போவதாக என்று நீ கனவு காண்பாயோ, அன்று முதல் பதின்மூன்றாவது ஆண்டு முடிவில் மன்னர் வம்சம் உன் முகாந்திரமாக மடிந்தொழியும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அதனைக்கேட்ட அவர் மனம் வருந்தி உடன் பிறந்தாரைப் பார்த்து, ''இன்று முதல் நான் விரதம் மேற்கொள்வேன். 'யார் என்னை நிந்தித்தாலும் பொறுத்துக் கொள்வேன். மனைவியைப் பிடித்து இழுத்தாலும் நான் எதிர்க்கமாட்டேன். என்னுடன் நீங்கள் ஒத்திருக்க வேண்டும்.''* என்றார்.

சூதுபோர்

துரியோதனுடைய சூழச்சி

அத்தினபுரம் சேர்ந்த துரியோதனன் சகுனி, கர்ணன், துச்சாசனன். இவர்களுடன் கூடிப் பேசுகிறான். ''மாமா! வரவர என் உடம்பே நிறம் மாறிவிட்டது. அர்ச்சுனன் பூதலம் முழுவதும் தன் வில் வன்மையால் வென்றுவிட்டான். மன்னர்கள் எல்லோரும் தருமனுக்குக் கப்பங்கட்டி அடங்கி ஒடுங்கி விட்டார்கள். இராஜசூய வேள்வியில் தேவர்கள் முனிவர்கள் யாவரும் தருமனைச் சிறப்பித்தார்கள். பாண்டவர்கள் அடைந்த பெருமைக்கு எல்லையுண்டா? அதனை நினைத்து, ஆனி, ஆடி மாதங்களில் சிறிய குளம் வற்றுவது போல் நான் வற்றுகிறேன். என்றால் இத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை; தீயிலாவது குதிப்பேன்; நீரிலாவது விழுவேன்; நஞ்சையாவது உண்பேன். அந்த மாப் பேரவையில் முதல் பூசை கிருஷ்ணனுக்கு நடந்தது. அது முறையன்று என்று உண்மையை உரைத்த சிசுபாலன் கொல்லப் பெற்றான்; நான் மறுத்திருந்தால் எனக்கும் இதே கதிதானே? மயன் கட்டிய மண்டபத்தில் நான் அடைந்த ஏமாற்றமும், அவமானமும், எல்லோரும் பரிகசித்ததும் எனக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றன; என்றான்.

கர்ணன், ''தம்பி! அங்குக் குவிந்திருந்த நிதிகளைக் கண்டால் மயக்கமே வரும்போல் இருக்கிறது. அள்ளிக் கொடுக்கக் கொடுக்கக் குறையவில்லை. இப்போது கிருஷ்ணன் துவாரகை சென்றிருப்பான். நாம் போய்ப் போர் செய்து கொன்று விடுவோம்'' என்றான்.

---

* கலகம் வரக்கூடாது; ஒருவரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது, என்ற அருள் உள்ளத்தினாலேயே சூதாடத் தருமர் இசைந்தார்.



நெய்வேலித் தொகுதிக் கோயில்களைச் சேர்ந்த யணிமுத்தாளம்மன் கோயில் திருப்பணித் துவக்க விழாவில், நமது அறநிலைய ஆணையர், உதவியாணையர், நெல்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் பிரதம நிர்வாக அதிகாரி திரு. என். கே. விநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளுதல்.

திருச்சி மாவட்டம் பிட்சாண்டார் கோயிற் கிராமம், உத்தமர் கோயிலின் ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன், அறநிலைய ஆணையர் திரு. கே.எஸ். நரசிம்மன் B.A.B.,L.I.A.S துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ் B.A.B L. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தல்

சகுனி, துரியோதனா! எளிதில் பாண்டவரை அழிக்க இயலாது. அவர்களை நாம் முளையிலேயே அழிக்க முயன்று முடியவில்லை. அவர்கள் இப்போது வயிரத் தூண்போல் விளங்குகின்றார்கள். இடிம்பன், பகன் முதலிய அசுரர்களைக் கொன்ற பீமன், யாராலும் எதிர்க்க முடியாத ஜராசந்தனைக் கைச் சண்டையாலேயே கொன்றான் என்றால், நாம் கனவிலேகூட அவனை எதிர்க்க முடியுமா? காண்டவ தகனத்தில் இந்திராதி தேவர்களை ஒரு வில்லினால் வென்றான் விஜயன். வடக்கேயுள்ள கந்தர்வ உலகத்தையும் வென்றான்.

இப்பிறப் பொழிய இன்னும்
ஏழேழு பிறப்பினாலும்
மெய்ப்பிறப் பற்றநீதி
தருமனை வெல்லமாட்டோம்;
ஒப்பறப் பணைத்த தோளாய்
உபாயம் எங்கேனும் ஒன்றால்
தப்பறச் சூதுகொண்டு சதிப்பதே
கருமம் என்றான்.

தருமனுக்குச் சூதாட்டத்தில் பிரியம் உண்டு. ஆனால் ஆடத் தெரியாது. நான் அந்த சூதாட்டத்தில் சமானம் இல்லாத வல்லவன், உனது பிதாவின் மூலம் பாண்டவர்களை இங்கு வரவழைத்துச் சூதாட்டத்தின் மூலம் அவர்களது நாடு நகர் செல்வங்களைக் கவர்ந்து விடுவோம்'' என்றான். ஒருநாள் இரவு சகுனியுந் துரியோதனனும் சென்று திருதராஷ்டிரனை வணங்கி, அவன் அருகில் அமர்ந்தார்கள், சகுனி, ''மாமா! சில தினங்களாகத் தங்கள் முதல் மகன் துரியோதனன் உண்ணாமலும் உறங்காமலும் உள்ளம் வருந்துகின்றான். நிறம் மாறி வெளுத்தும் இளைத்தும் பெருந்துயரால் துடிக்கின்றான். அதை நீர் ஏன் அறியவில்லை?'' என்றான்.

திருதராஷ்டிரன் ''மகனே! துரியோதனா! உனக்கு என்ன குறை. அளவற்ற நிதியும், உயர்ந்த படுக்கையும், சுவையான உணவும், அழகிய மனைவியும், பட்டும் அணிகலன்களும் இருக்கின்றனவே; நீ கவலைப்பட வேண்டிய காரணம் யாது?'' என்று வினவினான்.

—தொடரும்

திருச்சி மாவட்டம் பிட்சாண்டார் கோயிற் கிராமம் உத்தமர் கோயிற் பரிசளிப்பு விழாவில், அறநிலைய அமைச்சரும் வேளாண்மைத் துறை அமைச்சரும் கலந்து கொள்ளுதல்.



தமிழ் அருச்சனை

மாண்புமிகு

திரு. மு. கண்ணப்பன் அவர்கள்,

அறநிலைய அமைச்சர்

தமிழகமெங்கும் பரவலாகப் பலருடைய கவனத்தையும் கவர்ந்த இன்றைய பிரச்னைகளில் தமிழ் அருச்சனையும் ஒன்றாகும். தமிழ் நாட்டின் திருக்கோயில்களில் அண்மையில் பெரும்பாலான கோயில்களில் தமிழ் அருச்சனை முறை துவக்கப்பட்டதையொட்டிச் சிலரிடத்திலிருந்து எதிர்ப்பும் ஆட்சேபனைகளும் கிளம்பத்தொடங்கின. தமிழ் நாட்டில் இரு மடாலயங்களைச் சேர்ந்தவர்கள், தமிழக உயர்நீதி மன்றத்தில் திருக்கோயில்களில் தமிழ் அருச்சனை முறையை ஏற்படுத்துவதால், கோயில்களின் சாந்நித்தியம் கெட்டுவிடும் என்றும், இது அரசின் குறுக்கீடு என்றும், ஆகவே ஆலயங்களில் தமிழ் அருச்சனை முறையை ஏற்படுத்தக் கூடாது எனத் தடை விதிக்கவேண்டும் என்றும் கோரி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். எனவே வழக்கு உயர்நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும் நிலையில் தமிழ் அருச்சனை முறைதான் சிறந்தது, வடமொழியில் அருச்சனை செய்வது தேவையில்லை என்பதைப்பற்றியெல்லாம் இப்போது நான் எந்தக் கருத்தையும் வெளியிட விரும்பவில்லை. ஆயினும் தமிழ்வழிபாட்டால் ஆண்டவனோடு தொடர்பு கொண்ட அடியார்களையும், அவர்தம் பாடல்களைப் பற்றியும் மட்டுமே சிறிது கூற விரும்புகின்றேன்.

பல்லாண்டுகளாகத் தமிழ் நாட்டுக் கோவில்களில் வடமொழியில் அருச்சனை நடைபெற்று வருவது உண்மை. ஆயினும் அண்மைக்காலத்தில் தமிழ்ப் பெருமக்களிடையே தோன்றிய தமிழ் ஆர்வம் காரணமாக, இறையுணர்வு மிக்கோர் தமிழ் வழிபாட்டின் பெருமையை உணர்ந்து தமிழ் நாட்டின் திருக்கோயில்களில் தமிழ் அருச்சனை முறையைப் பெரிதும் உவந்து விரும்பியதனாலே அரசும் அவர்தம் விருப்பினைச் செயல்படுத்தும் வண்ணம் திருக்கோயில்களில் தமிழ் அருச்சனை முறையைச் செயல்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டது. வடமொழியில் அருச்சனை என்பது ஆகம விதிப்படி மந்திரம் ஓதி ஆண்டவனை வழிபடுவதாகும். அந்த மந்திரம் எது என்று ஆராயப்புகுந்தால் தமிழர்களின் மிகத் தொன்மையான ‘தொல்காப்பியம்’ நமக்குத் துணை புரிய வருகின்றது,

148691

''நிறைமொழி மாந்தர்
ஆணையில் கிளந்த
மறைமொழி தானே
மந்திரம் என்ப''

என்று அழகொழுகத் தொல்காப்பியர் மந்திரத்திற்கு இலக்கணம் எழுதி அளித்திருக்கிறார், தமிழ் முனிவரான அகத்தியரின் மாணவரான தொல்காப்பியர் ''எல்லாநற்பண்புகளும் நிறைந்து மொழியவல்ல பெருமக்கள் ஆணையிட்டுக் கூறிய வாய்மொழிகள் யாவும் மந்திரம் ஆகும்'' என்று கூறியிருக்கின்றாரேயன்றி, இன்னமொழியில் மட்டும் உள்ளது தான் மந்திரம் என்று கூறினாரல்லர். அடுத்து ''பாட்டுரை நூலே வாய்மொழி'' என்றும் ''மறைமொழி கிளந்த மந்திரத்தான''என்றும் தொல்காப்பியர் குறிப்பிட்டிருக்கிறார். இந்தத் தமிழ் மந்திர மொழிகளுக்குத் தனிப்பெரும் ஆற்றல் ஒன்று உண்டாம், அவை ஆக்கவும் அழிக்கவும் செய்யுமாம்.

புராணவரலாறு

இதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் பெரிதும் பாராட்டிப் புகழப்பெறும் சமயக் குரவர் நால்வரின் தேவாரத் திருப்பதிகங்களுக்குத் தனித்தெய்வத்தன்மை அளித்து எண்ணப்படுகிறது. ''நிறைமொழி மாந்தர்களான அவர்கள் தம் தீந்தமிழ் மறைமொழியாலே'' ஆண்டவனைப் பாடிப்பரவியே அருள் பெற்றவர் என்பது புராண வரலாறு. அவர்கள் எல்லாம் ஆண்டவனின் அருள் பெற்றவர்கள் என்பதோடு மட்டுமின்றி அவர்கள் வேண்டிய இடங்களிலெல்லாம், வேண்டிய வண்ணமெல்லாம் இறைவனையே ஆட்டுவித்து ஏவல்புரிய வைத்திருக்கிறார்கள். அவர்கள் இன்னலுற்ற போதெல்லாம் இடையறாத் துணையாய் இறைவன் நின்றதற்குக் காரணம் அவர்கள் பாடிப்பரவிய செந்தமிழ்ப் பாடல்களேயாகும்.

ஆண்டவன் சமயக் குரவர்கள் தன்னைப் பாடவேண்டும் என்று விருப்புற்ற நேரத்தில் எல்லாம் தமிழ் மொழியில் அடி எடுத்துக் கொடுத்ததாகத்தான் வரலாறு உண்டு. சீர்காழிப் பதியிலே அம்மையப்பனின் அருள்பெற்ற ஞானசம்பந்தக் குழந்தையைச் சிவபாத இருதயர் அச்சுறுத்தி யாருனக்குப் பாலூட்டியவர் என்று வினவியபோது, தேவியின் திருமுலைப் பாலுண்ட குழந்தை ''தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூ வெண் மதிசூடி'' எனச் செந்தமிழால் திருப்பதிகம் பாடியதாக வரலாறு உண்டே ஒழியச் சம்ஸ்கிருதத்திலே, பாடியதாக இல்லை.

009-

திருவெண்ணை நல்லூரிலே தடுத்தாட் கொண்ட சுந்தரனாரைப்பார்த்து ஆண்டவன் என்னைப்பாடுக என்று பணித்தபோது ''என் சொல்லிப்பாடுவேன்'' என்று இறைவனை இறைஞ்ச, என்னைப்பித்தன் என்றல்லவா விளித்தாய். எனவே ''பித்தா என்றே பாடுக'' என்று ஆண்டவன் 'பித்தா' என்று அடி எடுத்துக் கொடுத்தது தெய்வத் தமிழ் மொழியாலேயேயன்றி வடமொழியில் அல்ல.

சூலை நோய் தந்து ஆண்டு கொண்ட நாவுக்கரசரை மன்னன் கல்லைக் கட்டிக் கடலில் இட்டபோதும் அவர் பாடியது ''கற்றுணைப் பூட்டி ஓர்கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்று பாடவே அருள் புரிந்தானேயன்றி வடமொழியில் மந்திரம் ஓதியதாலேயல்ல என்பதை உணரவேண்டும். இவ்வாறு பல நிகழ்ச்சிகளைப் புராணங்களிலேயிருந்து எடுத்து அடுக்கிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் கூறித்தான் இறைவனுக்கு ஏற்றமொழி தமிழ்... என்று வாதிட வேண்டிய அவசியமில்லை. வழிபாடு குறித்த மிகச் சாதாரணமான உண்மை ஒன்றை நாம் உணர்ந்து கொண்டால் போதும். ஆண்டவனைத் தமிழ்ப் பெருமக்கள் தமிழிலே வழிபடுவது ஆகாது என்று கூறுவோர் இதைக் கவனிக்கவேண்டும்.

திருஞான சம்பந்தர் தம்பதிகம் ஒன்றில் 'தம்மலர் அடி ஒன்றடியவர் பரவத் தமிழ்ச் சொலும் வடசொலும் தாள் நிழல் சேர, அம்மலர்க்கொன்றை அணிந்த எம் அடிகள் அச்சிறுபாக்கம தாட்சி கொண்டாரே'' என்று அருளிச் செய்த பாங்கை உணரவேண்டும். ''தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் தாள் நிழல் சேர'' என்பது தமிழாலும் வடமொழியாலும் மந்திரங்களைச் சொல்லி, மலரைத்

திருவடிகளில் சூட்டிய குறிப்பை உணர்த்துவ தாகும். அப்பர் அடிகளும் இறைவனை நோக்கி ''ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்'' என்று போற்றித் துதித்திருக்கிறார். இவ்வா றெல்லாம் சமயக்குரவர்கள் வடமொழியோடு இணையாகத் தமிழை வைத்து ஒரு இம்மி யேனும் குறையாத நிலையைத் தமிழ் மொழிக்கு அளித்து, இறைவனோடு ஒன்று பட்டு உய்ந் தார்கள் என்று வரலாறு.

தமிழிலே பாடு

இவ்வாறு எவ்வகையானும் சிறப்புமிக்க தமிழ் அருச்சனை இறைவனுக்கு ஏற்புடைத் தாக அமையுமா என்று யாரும் ஐயப்படத் தேவையில்லை. ஏனெனில், வன்தொண்டரைப் பார்த்து இறைவன் கூறியதாகச் சேக்கிழார் பின்வரும் பாட்டால் குறிப்பிடுகிறார்.

மற்றும் நீ வன்மை பேசி
வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில்
பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார்
தூ மறை பாடும் வாயார்''

தமிழிலே என்னைப்பாடு என்று தான் இறைவனே. பணித்திருக்கிறார்.

இவ்வாறு சைவத்திலே பல்வேறு ஆதாரங் களைக் காட்டித் தமிழின் சிறப்பினையும், தமிழ் அருச்சனை ஆண்டவனுக்கு எவ்வளவு உகந்தது என்பதனையும் கூறமுடியும். வைணவப் பிரிவைப் பொறுத்தவரையில் இன்றளவும் இறைவன் திரு உலாப் போதுங்கால் ஆண்டவன் பின் வடமொழி வேதபாராயணமும், தமிழ் நாலா யிரத் திவ்யப்பிரபந்தமும் பாடுதல் இன்னும் வழக்கமாக இருந்து வருகிறது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ்ப் பெருமக்கள் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாணிக்க வாசகப் பெருமானின் ''நமச் சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்பது இறையுணர்வு மிக்கோரை ஆண்டவனோடு ஐக்கியப்படுத்துவதாக இல்லையா? சிவபுராணத்தில் வரும்

ஈசனடி போற்றி
எந்தை அடி போற்றி
தேசனடி போற்றி
சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும்
மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்
தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி''

என்று இறைவனுடைய குணங்களைப்போற்றிப் பரவினால் மனதுக்கு இன்பமளிப்பதோடு நம் மையும் இறைவனோடு ஒன்ற உறுதுணை புரிய வில்லையா?

தமிழ்ப்பெருமக்கள் குறிப்பாக இறை யுணர்வு மிக்கோர் இதனை எண்ணிப் பார்க்க வேண்டும். இறைவனுக்குகந்த நம் தமிழ் மொழியில் அவனைப்போற்றி அருச்சனை செய்வது தகாதா? இனியாவது மாயை யிலிருந்து விடுபட்டு உண்மையை ஏற்க முன் வரவேண்டும், தமிழ்ப் பெருமக்கள் தமிழ் அருச்சனை முறைக்கு நிறைந்த ஆதரவினைத் தரவேண்டும். திருக்கோயில்களுக்குச் செல்லும் போதெல்லாம் பழக்கத்திற்கும் வழக்கத் திற்கும் இன்னமும் அடிமையாகாமல் நல்லன வற்றை உய்த்துணரும் திறம்கொண்டு தமிழ் அருச்சனை முறைக்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும், தமிழாலே வாழ்வோம். வளர் வோம். ஓங்குபுகழ் பெறுவோம்.

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

அலுவலர்கள் சங்கமுதல் மாநில மாநாடு

[சென்ற செப்டம்பர் மாதம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் முதல் மாநிலமாநாடு பற்றிய செய்தியின் சுருக்கம், இங்கு வெளியிடப்பெறுகின்றது.

— ஆசிரியர்.]

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்களின் சங்கம், தமிழ்நாடு அரசினரால் ஆணை எண் 3175 (பொது) பணித்துறை, தேதி 29-12-1960 இன்படி அங்கீகாரம் பெற்றது. சங்க விதிகளின்படி, செயற் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 15-8-70 முதல் 25 உறுப்பினர்களைக்கொண்ட செயற்குழு செயல்படத் துவங்கியது. பின்னர் 13-9-70-ஆம் தேதியில், பொதுக்குழுக்கூட்டம் சென்னையில் நடைபெற்றபோது, அலுவலர்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அவை அரசினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றின்பேரில் அரசினரின் உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது.

12-6-71-ஆம் தேதியில், பழனியில் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் மாநில மாநாடு ஒன்று நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு, மாநாட்டை மதுரை—திருப்பரங்குன்றத்தில், 12·9·71-ஆம் தேதி நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது. திரு. வி. சுப்பையன் அவர்கள் தலைமையில் மாநாட்டு வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது. மாநாட்டை ஒட்டி மலர் ஒன்றை வெளியிட வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது. 12-9-71-ஆம் தேதி, திருப்பரங்குன்றத்தில் உள்ள தேவசேனா திருமண மண்டபத்தில் மாநாடு சிறப்புற நடந்தேறியது. மொத்தம் 400 உறுப்பினர்களில் 300-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள், மாநாட்டிற்கு வந்திருந்து சிறப்பித்தது குறிப்பிடத் தக்கது. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் M.L.C. அவர்கள் தலைமை தாங்க, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் திறந்து வைக்க, ஆணையர் திரு. கே எஸ் நரசிம்மன், பி. ஏ. பி. எல்., ஐ.ஏ.எஸ்., அவர்கள் மாநாட்டு மலரை வெளியிட, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. காவேரி மணியம், திரு. கு. திருப்பதி, மதுரை மேற்குப் பஞ்சாயத்து யூனியன் துணைத்தலைவர் திரு. எஸ். முத்துப்பாண்டியன், மதுரை மாநகராட்சி உறுப்பினர் திரு. சந்தானம், வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் அறங்காவலர்குழுத் தலைவர் திரு. கோ. கு. பழனிச்சாமி, ஸ்ரீரங்கம் தேவஸ்தான அறங்காவலர் குழுத்தலைவர் திரு. கு. இராஜ வேலு ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். தலைமை வகித்த தவத்திரு. அடிகளார் அவர்கள் அலுவலர்களின் குறைகளைப்பற்றி மிக அழகாகவும், நகைச்சுவையுடனும் விளக்கி, அவற்றை யெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவுடன் கவனிப்பார்கள் என்று தமது கருத்தைத் தெரிவித்தார்கள். மாநாட்டில் பேசிய பேச்சாளர்கள் அனைவரும் அலுவலர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்ற கருத்தை மிகவும் வலியுறுத்திப்பேசினார்கள். மாநாட்டில் ஓய்வுபெற்ற துணை ஆணையர் திரு. ஏ. சர்க்கரை அவர்களும், ஆணையர் அவர்களின் நேர்முக உதவியாளரும், தலைமையிடத்துத் துணை ஆணையருமான திரு. கே. இராஜா B.A., B.L. அவர்களும் அலுவலர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை விளக்கிக் கூறினார்கள்;

முதல்நாள், அதாவது 11-9-71ஆம் தேதியன்று சங்கத்தின் பொதுக்குழுக் கூடி, தன்து கோரிக்கைகள் உள்ளடங்கிய 51 தீர்மானங்களை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானங்கள் மாநாட்டின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. தீர்மானங்களைப் பரிசிலனை செய்து, ஆணையர் அவர்களைக் கலந்துகொண்டபின்னர், 15 தீர்மானங்களில் உள்ள கோரிக்கைகளைக் கொள்கைஅளவில் ஏற்றுக் கொள்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேடையிலேயே அறிவித்தார்கள். நீண்டகாலமாகப் பதவி முன்னேற்ற வாய்ப்பின்றிச் சோர்வுற்றிருந்த அலுவலர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, புதிய தெம்பையும் உற்சாகத்தையும் அளிக்க வல்லதாக அமைந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நல்ல பண்பும், கருத்துச் செறிவுள்ள இனிய பேச்சும், அந்தந்த இடத்திலேயே பிரச்சினைகளுக்கு முடிந்த அளவு தீர்வுகாணும் டாக்டர் கலைஞர் அவர்களின் பாணியும், அலுவலர்கள் மட்டுமன்றி, மாநாட்டிற்கு வந்திருந்த அதிகாரிகள், மற்றும் பெரியோர்களால் மிகவும் போற்றப்பட்டது.

மாநாட்டை நடத்துவதற்கு வள்ளி தேவசேனா திருமண மண்டபத்தைக் கொடுத்து உதவிய மதுரை மீனாட்சி தேவத்தான அறங்காவலர் குழுவிற்கும், நிர்வாக அதிகாரிக்கும் நன்றி கூறிக் கொள்கிறோம், மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், நமது மதிப்பிற்குரிய ஆணையர் அவர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கா.வேரிமணியம் திரு. கு. திருப்பதி, மதுரை மாநகராட்சி உறுப்பினர் திரு சந்தானம், மதுரை மேற்குப் பஞ்சாயத்து யூனியன் துணைத்தலைவர் திரு எஸ் முத்துப்பாண்டியன், கோவை மாவட்டம், வாழைத்தோட்டத்து அய்யன்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. சோ. கு. பழனிசாமி, ஸ்ரீரங்கம் தேவஸ்தான அறங்காவலர் குழுத்தலைவர் திரு. கு. ராஜவேலு, நிர்வாக அதிகாரிகள் மற்றுமுள்ள பெரியோர்கட்கு, எங்கள் சங்கத்தின் சார்பில் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாநாட்டின் வெற்றிக்காக அரும்பாடுபட்ட சங்க உறுப்பினர்கள், மற்றும் நண்பர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். சங்கம் அமைத்து, ஒரு வருடத்திற்குள் கூட்டப்பட்ட இந்த முதல்மாநாடு, மிகவும் வெற்றிகரமாக அமைவதற்கு அருள்புரிந்த தமிழ்க் கடவுளாம் முருகப்பெருமானை வணங்கி வாழ்த்துகிறோம்.

— கே. நந்தகோபால்,
செயலாளர்,

கே. பாலசுந்தரம்.
தலைவர், தமிழ் நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
அலுவலர்கள் சங்கம்,

செய்திச் சுருக்கம்

சிலைகளுக்குப் பாதுகாப்பு:

தமிழ்நாடு அறநிலையத்துறை, கோயிற் சிலைகள் திருட்டுப் போகாமலிருக்க ஏற்பாடொன்றைச் செய்துள்ளது. தமிழ் நாட்டின் பல்வேறு கோயில்களில் உபயோகத்தில் இல்லாமல் இருக்கும் சிலைகளை அந்தந்தப் பகுதியில் இதற்கெனத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கும் பெரிய கோயில்களில் கொண்டு போய் வைக்குமாறு கோயில் நிர்வாக அதிகாரிகளுக்கு அறநிலையத்துறை விரைவில் உத்தரவு பிறப்பிக்கும்.

இதற்காகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள கோயில்கள் வருமாறு:—சென்னைப் பகுதிக்குத் திருவண்ணாமலையிலுள்ள அருணாசலேசுவரர் கோயில்—மதுரைப் பகுதிக்கு மீனாட்சியம்மன் கோயில் – கோவைப் பகுதிக்குத் திருவானைக் காவலில் உள்ள ஜம்புகேசுவரர் கோயில்—தஞ்சைப் பகுதிக்குத் திருவாரூர்த் தியாகேசர் கோயில்.

அறநிலையத் துறையின்
மாநில ஆலோசகர் குழுக் கூட்டம்

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர்ப் பாலசுப்பிரமணியசுவாமி ஆலயம், கோவிந்தம்மாள் ஆதித்தனுர் கல்யாண மண்டபத்தில், காலை சுமார் 10.00 மணியளவில், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குக் குழுஉறுப்பினர்கள் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ. எஸ் (ஓய்வு), திரு. சின்னதுரை ஆகியோரும் மற்றும் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்களும், வருவாய்த்துறை, செயலாளர் திரு. ஆர். பசுபதி, ஐ. ஏ. எஸ் அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி. எல்., ஐ.ஏ.எஸ் அவர்களும் வந்திருந்தனர்.

வருவாய்த்துறைச் செயலாளர் திரு. ஆர். பசுபதி, ஐ. ஏ. எஸ். அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களையும் வரவேற்ருர். இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் முதன்மையாக ஆராயப் பெற்றன.

1. ஆலயங்களுக்குச் சொந்தமாய்ப், பிறர்வசம் உள்ள நிலங்கள் :

ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை ஆராய்ந்து சேகரித்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை ஆலயங்களுக்குச் சொந்தமான சுமார் 15,000 ஏக்கர் நிலங்கள், தனியார் வசம் உள்ளன என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை ஆலயங்களுக்கு மீட்பது சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளையும் துரிதமாக எடுக்கத் தனி ஆய்வாளர்கள் எண்மர் (8) நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதுசம்பந்தமாகத் துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும் மேற்கொண்டு துரித நடவடிக்கைகள் எடுத்து மேற்படி நிலங்களை மீட்கவேண்டும்.

2. ஆலயங்களுக்குச் சேரவேண்டிய நிலுவை :

இப்பொருள் சம்பந்தமாகப் பொதுநலப் பொறுப்பாட்சிச்சட்டம் (Public Trust Act), 1961, பிரிவு 19-ன்படி, ஆலயங்களின் நிர்வாகிகள் வருவாய்த்துறை அதிகாரியிடம் மனுச் செய்துகொள்ளவேண்டும். இப்பொருள் குறித்துச் சார்நிலை அதிகாரிகள், மற்றும் அறநிலைய நிர்வாகத்தர்கள் ஆகியோர், துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்விதம் செய்தால் அறநிலையங்களுக்குச் சேரவேண்டிய நிலுவைகளிற் பெரும்பாலான பகுதியை வசூலிக்க வாய்ப்பு ஏற்படும்.

3. ஆலயங்களில் உள்ள ஆயிரக்கால் மண்டபங்கள் :

தமிழகத்தில் 8 கோயில்களில் ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ளன. அவைகளை நன்கு பராமரிக்கும்பொருட்டு, மதுரை மீனுட்சிசுந்தரேசுவரர் ஆலயத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் கலைக்கூடம் வைத்து இருப்பதுபோல், மற்ற ஏழு ஆலயங்களில் உள்ள ஆயிரக்கால் மண்டபங்களிலும் கலைக்கூடங்கள் வைக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

4. ஆலயங்களில் திருப்பணிவேலைகள் :

ஆலயங்களில் திருப்பணி வெகுவிரைவாக நடைபெற்றுவருகிறது. மேலும் பொதுவான பலவேலைகள் எடுக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. திருப்பணி, கல்யாண மண்டபம், பயணியர் விடுதி, மற்றும் பல பிற வேலைகளுக்காக 1966 ஆம் ஆண்டு முதல் 1971 வரை, கீழ்க் கண்டவாறு மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	மதிப்பீடுகள்	தொகை
1966	334	1,19,001,05
1967	278	1,10,54,331
1968	95	35,33,390
1969	233	84,02,749
1970	591	1,29,975,71
1971	600	1,36,09,355

தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் ஆலயங்களுக்குக் கொடுக்கப்படும் அரசு மானியத் தொகையை (Govt. Grant) அதிகரிக்கும்பொருட்டு, நடவடிக்கை எடுக்குமாறும் தீர்மானிக்கப்பட்டது.

திருமயிலைக் கபாலீச்சுரர் ஆலயத்தில் திருமுறைக் கல்வெட்டுகள் உபயமாகச் செய்தளித்த திருவாளர் திருச்சி லா. ஆ. பரமன் செட்டியார் அவர்களுக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் ஆலயத்தின் சார்பில் பட்டாடை போர்த்திக் கௌரவித்தல்.
(22—8—71)

சமயச் சான்ருேர்களின் தமிழ்ப் பற்று

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை

தமிழ்நாட்டில் தோன்றியருளிய சான்ருேர்கள் அனைவரும், தமிழ் மொழியினிடத்து அளவற்ற அன்பும் ஆர்வமும் பக்தியும் கொண்டிருந்தனர். எல்லாப் பற்றுக்களையும் துறந்து, ''பற்றுக பற்றற்ருன் பற்றினை'' என்றபடி, கடவுட் பற்று ஒன்றுமட்டுமே கொண்டிருந்த ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்ற சான்ருேர்களும்கூட, தமிழ் மொழியின்பால் எல்லையற்ற ஈடுபாடும் பற்றும் கொண்டு விளங்கினர். எல்லாப் பற்றுக்களையும் பற்றற நீத்த அவ் அருளாளர்களுக்கும் தமிழ்ப்பற்று விடமுடியாததாக, விடவேண்டாமல் இன்றியமையாது இருந்து தீரவேண்டிய சிறந்த பண்பு நலமாக அமைந்திருந்தது. ''பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீர் இறைத்தேன்; உற்றலால் கயவர் தேருர் என்னும் கட்டுரையோடு ஒத்தேன்" எனவரும் திருநாவுக்கரசரின் திருமொழியும் இங்குச் சிந்திக்தற்பாலது.

மக்கள் தம் கருத்தை வெளியிடுவதற்கு உரியதொரு வெறும் கருவியாகவே (A mere vehicle for thought and expression), ஒரு சிலர் தமிழ்மொழியினைக் கருதுவதுண்டு. ஆனல் தமிழகத்தில் தோன்றிய சான்ருேர்கள் அனைவரும், அத்தகையதொரு சாதாரண வெறும் கருவியாகத் தமிழ்மொழியினைக் கருதிற்றிலர். தமிழ்மொழியினைத் தெய்விக நலம்சான்ற மொழியாகவும், உண்மையில் ஒரு தெய்வமாகவுமே, தமிழகத்துச் சான்ருேர்கள் அனைவரும் போற்றிப் பாராட்டி வந்துள்ளனர். தமிழணங்கு என்றும், தமிழ்த்தாய் என்றும், தமிழ்த்தெய்வம் என்றும், பலவாறு சான்ருேர் பெருமக்களால் தமிழ்மொழி போற்றித் துதிக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி
இலக்கணம் செய்யப் பெற்றே,
அறைகடல் வரைப்பிற் பாடை
அனைத்தும்வென் ருரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
உள்நினைந் தேத்தல் செய்வாம்

—சிவப்பிரகாச சுவாமிகள்

இங்ஙனம் வாழையடி வாழையாகத் தொன்றுதொட்டுத் தோன்றியருளிப்போந்த நம் தமிழகத்துச் சமயச் சான்ருேர்கள் பலரும், தமிழ்மொழியின்பாற் கொண்டிருந்த பேரன்பின் திறனை விளக்கும் ஒரு சில இலக்கியச் சான்றுகளை மட்டும் ஈண்டுக் காண்போம்.

(1) திருஞான சம்பந்தர், தமிழ்மொழியின் சிறப்பினைத் தமது திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்புச் செய்யுள் ஒவ்வொன்றிலும், பற்பல வகையாகச் சிறப்பு அடைமொழிகள் கொடுத்துப் போற்றியருளி இருக்கின்றார். தமிழ்மொழி ஆர்வத்திலும் பற்றிலும் அவர் மிகவும் தலைசிறந்து விளங்கினார். "தமிழின் நீர்மை பேசப்படும் இடங்களிலெல்லாம் இறைவன் சிறிதும் அகலாமல் அங்கேயே நிலைபெற்று எழுந்தருளி விளங்கியருள்வான்" என்பதனை வலியுறுத்தி, இறைவனின் இன்னருளைப் பெறுவதற்கு இனிய தமிழால் வழிகண்டவர் திருஞானசம்பந்தரே யாவர். அதனாலேயே திருநாவுக்கரசர் முதலாக இராமலிங்க அடிகளார் ஈறாக, வாழையடி வாழையென வந்த தமிழ்ச் சைவச் சான்றோர் அனைவரும், திருஞானசம்பந்தரைத் தனிப்பெரும் தலைவராக மதித்து விரும்பிப் போற்றி மகிழ்வாராயினர்.

(2) இங்ஙனமே 'தமிழ்மொழித் தலைவர்' எனச் சேக்கிழாரால் சிறந்தெடுத்துப் போற்றப் பெறும் திருநாவுக்கரசர்பெருமான் தமிழின் மாட்டுக் கொண்டிருந்த அன்புக்கும் ஆர்வத்திற்கும் அளவேயில்லை. இறைவனையே அவர் தமிழன் என்று சிறப்பாகக் குறிப்பிடுவதுடன், "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்றும், "வாயிருந் தமிழே படித்து ஆளுருமையினால்தான்" அமணர் அழிய நேர்ந்தது என்றும் அருளிச் செய்கின்றார்.

(3) சுந்தரமூர்த்தி சுவாமிகள், இறைவனைப் "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில் சுவையொப்பாய், கண்ணிடை மணியொப்பாய்" எனப் புகழ்கின்றார். சிவபெருமான் "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கு அரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பான்" என்று இயம்புகின்றார். "இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசுநித்தல் நல்கினீர்" என்று பாடி இறைவனைப் பரவுகின்றார். "செந்தமிழ்த் திறம் வல்லிரோ? செங்கண் அரவம் முன் கையில் ஆடவே வந்து நிற்கும் இது என் கொலோ?" எனத் திருப்பைஞ்ஞீலி ஆரணீய விடங்கர் ஆகிய சிவபெருமானை வினவும் முறையிற் பாடியிருத்தலால், செங்கண் அரவின் கொடிய நஞ்சை நீக்கிப் போக்கவல்ல ஆற்றல் மிக்கதிறம், செந்தமிழ் மொழிக்கே உண்டு என்பது, சுந்தரரின் துணிபாதல் புலனாகின்றது.

(4) கருங்கல் மனத்தவரும் கரைந்துருகிக் களிதுளும்பும்படி திருவாசகம் என்னும் செந்தமிழ் மாமறையினை அருளிச் செய்த மாணிக்கவாசகர் "தண்ணார் தமிழ்" என்றும் "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" என்றும் குறிப்பிட்டுத், தமிழ்மொழியின்பால் தமக்குள்ள எல்லையற்ற ஈடுபாட்டினைப் புலப்படுத்தி யருளியிருக்கின்றார்

(5) முதலாழ்வார்களில் ஒருவராகிய பூதத்தாழ்வார் "ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணர்க்கு ஞானத்தமிழ் புரிந்த நான்" என்றும், "இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன் பெருந்தமிழன் நல்லேன் பெரிது" என்றும், தமிழின் சிறப்பினைப் போற்றியுள்ளார்.

(6) பெரியாழ்வார் 'தூயதமிழ்' 'சீர்மலி செந்தமிழ்' 'இன்தமிழ்' 'விட்டு சித்தன் விரித்த தமிழ்' எனப் பலவகைகளில் தமிழின் சிறப்பினைப் போற்றியிருக்கக் காண்கின்றோம்.

(7) "அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய் ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்" விளங்கிய ஆண்டாள் நாச்சியார், "சங்கத் தமிழ்" 'செந்தமிழ்' 'தூய தமிழ்' 'கோதை தமிழ்' என்றெல்லாம் அருளிச் செய்திருத்தல், தமிழின்பால் அவருக்கிருந்த அன்பின் மிகுதியைப் புலப்படுத்தும்.

(9) இவ்வாறே குலசேகர ஆழ்வார் 'நடைவிளங்கு தமிழ்', சொல்லின் இன்தமிழ், நற்றமிழ், சீரார்ந்ததமிழ், நல்லியல் இன்தமிழ், 'அந்தமிழின் இன்பப்பா' 'செந்திறத்த தமிழோசை' என்றெல்லாம் நவின்றிருக்கக் காண்கின்றோம்.

(9) திருமங்கையாழ்வார் 'இருந்தமிழ் நூற்புலவன்' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டு மகிழ்கின்றார்.

(10) ஆழ்வார்களில் தலைசிறந்தவராகிய நம்மாழ்வார், 'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும்ஆயிரம்' என்னும் தொடரில் 'பாலேய் தமிழ்' என்றும் பிறவாறும் இனிய தமிழின் இயல்பினை எடுத்தோதி யிருப்பதுடன், ''வண்டமிழ் நோற்கலுற்றேன் அடியார்க்கு இன்பமாரியே'' என்றும் அருளிச்செய்திருத்தல் காணலாம்.

(11) தொண்டரடிப் பொடியாழ்வார் தாம் பாடிய திருமாலையில், அரங்கநாதர் "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி, வடதிசை பின்புகாட்டித் தென்றிசை இலங்கை நோக்கி அரவணைத் துயில்கின்றார்'' என்னும் கருத்தமையப் பாடியுள்ளார். அப்பாசுரத்தின் விரிவுரையில், ''வடக்குத் திக்கு முரட்டு சம்ஸ்கிருதம் நடையாடுவதாகி, ஆழ்வார்களின் செவிக்கினிய ஈரச்சொல் நடையாடாத தேசம் ஆகையாலே, அத்திக்கிலுள்ளார் எல்லாரும் ஈடேறுதற்கு ஏற்படவேண்டிய பின்னழகை யெல்லாம் பெருமாள் காட்டியருளினர்" என வரும் பகுதி, ஆழ்வார்களின் செவிக்கினிய ஈரச்சொல் அமைந்த தமிழின் சிறப்பினை விளக்கியருளுவதாதல் காணலாம்.

இங்ஙனம் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ்மொழியினைப் புகழ்ந்து போற்றியிருத்தலின், அவர்களுக்குப் பின்னர் வந்த சான்றோர்கள் அனைவரும் கூட, அப்பெரு மக்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றித் தமிழ்மொழியின்பால் ஆராத காதல் அன்புகொண்டு போற்றிப் பாராட்டி மகிழ்ந்துள்ளனர்.

(13) சேக்கிழார் பெருமான் "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல", ஞானசம்பந்தர் தோன்றியருளியதாக நவிலுகின்றார். அருணகிரிநாதர் முருகனைச் செந்தமிழ்க் கடவுள் என்றும், செந்தமிழ் நூல் விரித்தோன் என்றும், முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன் என்றும், சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை முருகன் தமிழ்மொழியாலேயே பகர்ந்தருளினன் என்றும் குறிப்பிடுகின்றார்.

(14) துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், ''சிவபெருமான் அருளிச் செய்த வேதம், மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம் என்னும் இரண்டில், எது சிறந்ததென்று கேட்பீர்களாயின், வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்களைக் காண்கிலோம். திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள் தொடுமணற்கேணியில் சுரந்து நீர்பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி அன்பர் ஆகின்றனர்; வேதம் ஓதும் மற்றவர்கள் அங்ஙனம் ஆகின்றிலர்!'' இதனால் வேதம் திருவாசகம் என்னும் இரண்டில் எது சிறந்தது என்பதனை நீவிர் ஓர்ந்துணர்ந்து அறிந்து கொள்ளலாம் எனக் குறிப்பின் மொழிந்துள்ளார். மேலும் திருவாசகம் எல்லாரும் ஓதும் இயற்கைத்து ஆதலின் பொற்குடம் நிகர்க்கும் என்றும், வேதம் ஒருசிலரே ஓதும் உரிமையுடையதாகக் கூறப்படுதலின் மட்குடம் நிகர்க்கும் என்றும், வேதம் ஓதினாற் பெறும்பயன் வெறும் அறமே, திருவாசகம் ஓதினால் உறும்பயன் சிறந்த பெருமுத்தியாகும் என்றும், அவர்திறம் தெரித்து விளக்கியருளியிருக்கின்றார்,

''தேன்தேக் கெறியும்செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து ஆகலின்
பொற்கலம் நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும்; மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே''

(15) வடக்குத் திருவீதிப்பிள்ளை திருக்குமாரரும், பிள்ளைலோகாசாரியருடைய திருத்தம்பியாரும், வைணவப் பெருஞ்சான்றோருமாகிய அழகிய மணவாளப் பெருமாள் நாயனர், தாம் அருளிய ஆசாரிய இருதயம் என்னும் அரும்பெரும் நூலில் வேதத்தை மிருத்கடம் (மட்குடம்) என்றும், திவ்வியப் பிரபந்தத்தைப் பொற்குடம் என்றும் ஒப்பிட்டு, ''மிருத்கடம் போலன்றே பொற்குடம்'' என்று, மேற்குறித்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் கருத்தையே வலியுறுத்தி அரண் செய்திருத்தல் காணலாம்.

(16) இங்ஙனமே வேதாந்த தேசிகர் என்னும் வைணவப்பெரும் சான்றோரும் தாம் இயற்றிய அதிகார சங்கிரகம் என்னும் நூலில், வேதங்களில் உண்டாகும் சந்தேகங்களைத் தெளிந்து கொள்ளுவதற்குத் திவ்வியப் பிரபந்தங்களே துணை புரிகின்றன என்னும் கருத்தை,

''செய்யதமிழ் மாலைகள்நாம்
தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின்றோமே''

என்று அறுதியிட்டு உறுதியாக அருளிச் செய்துள்ளார். ''பாஷ்யகாரர் இதுகொண்டு சூத்திர வாக்கியங்கள் ஒருங்க விடுவர்'' என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் இவ்வுண்மையைச் செவ்விதின் வெளியிட்டருளியிருக்கின்றார்.

(17) திருவாய்மொழிக்கு ஈடு என்னும் இணையற்ற விரிவுரை இயற்றிய நம்பிள்ளை என்னும் வைணவப் பெருஞ்சான்றோரும், இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில், ''சக்கிய மலையிற் கலங்கின நீரானது ஒரோ பிரதேசங்களிலே வந்து தெளிந்து உபயோக யோக்கியம் ஆமாறுபோலே, அதிக்கிருதாதி காரமாய்க் கூளமும் பலாப்பிசினும் போலே ஒன்றை நிஷ்கர்ஷித்துப் பிரிக்க வொண்ணாத படியாய் இருக்கிற வேதார்த்தமானது, சர்வாதிகாரமாய் சர்வ சம்சயங்களும் தீர்ந்து தெளிந்தது, இவர் (நம்மாழ்வார்) பக்கலிலே வந்தவாறேயன்றோ'' என்று எழுதியிருத்தல் காணலாம்.

(18) அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும், தமது ஆசாரிய இருதயம் என்னும் நூலில், ''உயர்ந்த நிலத்தினின்றும் வேகத்தோடே வந்து நிலத்தில் விழுகையால் மண்ணோடு கூடியதாய்க் கலங்கிய சக்கிய மலையின் தீர்த்தமானது, திருவரங்கத்திலுள்ள தோதவத்தித் துறையிலும், திருக்குருகூரிலுள்ள திருச்சங்கணித் துறையிலும், தெளிந்த நீராகித் தனக்குள்ளே கிடக்கின்ற பொருள்களை நன்கு விளங்கக் காட்டுமாறு போல, தன் கருத்தை அறியாமல் தம் நெஞ்சில் தோற்றியதையே சொல்லுகின்ற சிற்றறிவாளர் கலக்கக் கலங்கின வேதமானது (அல்பச்ருதர் கலக்கின ச்ருதி), மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் பக்கலிலே வந்து சேர்ந்தபின், கலக்கம் தீர்ந்து தெளிவை அடைந்து, ஆழ்பொருள்களையெல்லாம் அறிவிக்க வல்லதாயிற்று'' என்றும் பிறவாறும் எழுதியுள்ள பகுதிகள், மேற்குறித்த வேதாந்த தேசிகரின் கருத்தையே வலியுறுத்தி நிற்றல் காணலாம். ''செந்திறத்த தமிழ்'' என்கையாலே "ஆகஸ்த்யமும் அநாதி" (ஆகஸ்த்யம்--அகத்திய முனிவர் வளர்த்த தமிழ் மொழி); ''வடமொழிமறை என்பது தென்மொழி மறையை நினைத்திறே'' என்று அவர் அருளிச் செய்திருப்பன பிறவும், நாம் இங்குப் பெரிதும் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன.

(19) ''நம்பி திருவழுதிவளநாடுதாசர், ஸ்ரீகீதை அப்யசித்தானொருவன் ஸந்த்யாஸதஸ்ஸிலே சென்றால், பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து விச்வஸிக்க மாட்டாமையாலே புறந்திண்ணையிலே கிட என்பார்கள்; திருவாய்மொழி கற்றான் ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால் ஸர்வேச்வரன் அகப்படப் புறப்பட்டெதிர்கொண்டு அகமொழித்துக் கொடுத்து அமுது படியுமெடுத்துவிட்டு ஸத்கரிப்பர்கள் என்பார்'' எனவரும் திருவாய்மொழி ஈட்டுரைப் பகுதியும், இங்கு நாம் கருதிப் பெரிதும் மகிழ்தற்குரியது.

(20) இராமாநுசர்க்குப் பாதுகையும் தண்டும்போல் விளங்கியிருந்த முதலியாண்டான் என்னும் வைணவப் பெருந்தகையார், தமிழின் இறைமை இயல்பினை உள்ளவாறு உணர்ந்து போற்றியுள்ளார். திருவாய்மொழியில் ''எங்கள் கண்முகப்பே'' எனத் தொடங்கும் பாசுரத்திற்குரிய ஈட்டு உரையில் குறிப்பிடப் பிடப்பெற்றுள்ள பின்வரும் செய்தி, இங்கு நாம் அறிந்து இன்புறற்குரியது. அது வருமாறு;

திருவரங்கத்தில் பெருமாள் திருவோலக்கம் வீற்றிருந்தார். அப்போது ஒரு பக்கத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களும், மற்றொரு பக்கத்தில் ஆய்ச்சிகளும் நின்றுகொண்டு பெருமாளைச் சேவித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கே போந்த வங்கிப்புரத்து நம்பி, ஸ்ரீவைஷ்ணவர்கள் நிற்கின்ற பக்கத்தில் நில்லாமல் ஆய்ச்சிகள் நிற்கிற பக்கமாகச் சென்று கலந்து

நின்றார். அதை முதலியாண்டான் கண்டு, அவரை நோக்கி, ''இது என்? ஸ்ரீவைஷ்ணவத் திரளில் சேராமல் ஆய்ச்சியர்கள் பக்கம்சென்று நீர் நிற்பது எற்றுக்கு?'' என்று வினவினர். அதற்கு வங்கிப்புரத்து நம்பி முதலியாண்டானை நோக்கி, ''நாம் எப்படியும் பலவகை அபிமானம் பாராட்டி அகங்கார மமகாரங்களையுடையவர் களாக இருப்போம். நம்மேல் இறைவனின் அருள் வெள்ளம் பாய்வது மேட்டுமடையா கவே இருக்கும் ஆனல் ஆய்ச்சியர்களோ, உண்மையில் தாழ்ச்சி உடையவர்களாகவும், தாழ்ச்சி தோற்றப் பேசுபவர்களாகவும் இருத்தலின், அவர்கள்பால் இறையருள் வெள்ளம் பாய்வது பள்ளமடையாக இருக்குமென்று அவர்கள் பக்கமாக நின்றேன்'' என்று கூறினர். அதனைக் கேட்ட முதலியாண்டான், ''அற்றேல் ஆய்ச்சிகள் சொன்னதென்? தேவரீர் அருளிச் செய்ததென்?'' என்று வினவினர். ''ஆய்ச்சிகள் நூறு வயது இருப்பீர். அழகிய இரட்டை உடுப்பீர். பொன்னல் பூணூல் இடுவீர்'' எனப் பெருமானை நோக்கிக் கூறினர். அடியேன் விஜயஸ்வ விஜயீபவ என்பன போல்வனவற்றைக் கூறினேன்'' என்றார். அதற்கு ஆண்டான், ''அங்குப்போயும் முரட்டு சமஸ்கிருதம் விட்டீரில்லை; எங்கே இருந்தாலும் நாம் நாமே; இங்கே எழுந்தருளி இரீர்'' என்று அருளிச் செய்தார் என்பது, ஈட்டுரையில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இதனல், முதலியாண்டான் தமிழ்மொழியின் மென்மையினையும், இனிமையினையும், எளிய இயல்பான உருக்கத் திறனையும் செவ்விதிற் றெளிந்து ஈடுபட்டிருந்தார் எனத் தெரிகின்றது.

(21) வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகர் ஆகிய தாயுமான சுவாமிகள், சிவ பெருமான் தம் திருச் செவிகளில் ''மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர்சொலும் தமிழ்'' கேட்டு மகிழ்வதனைப் போற்றி மகிழ்வதுடன், ''வடமொழியில் வல்லான் ஒருத்தன் வரவும் திராவிடத்தில் வந்ததா விவகரிப்பேன்; வல்ல தமிழறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன்'' எனவரும் தமது பாடற்பகுதியில், தமிழ் கற்ற ஒருவரிடத்தில் தமக்குள்ள பேரன்பையும் பெருமதிப்பையும் புலப்படுத்தியிருக்கக் காண்கின்றோம்.

(22) செந்தில் முருகன் திருவருள் பெற்றுச் சிறந்து திகழ்ந்திருந்த குமரகுருபரர், அம்முருகன்பால் ''ஆசுமுதல் நாற்கவியும், அட்டாவதானமும், சீர்ப்பேசும் இயற் பல்காப் பியத்தொகையும், ஓசை எழுத்து முதலாம்ஐந்தி லக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து'' அருளுமாறு வேண்டியிருத்தல், அவர்தம் அளப்பரிய தமிழ் அன்பையும் ஆர்வத்தையும் அறிவிக்கும். மேலும் அவர், தாம் பாடியருளிய மதுரைக் கலம்பகம் என்னும் நூலில், "தமிழின் எல்லையற்ற இனிமையினைக் கொள்ளை கொண்டு உண்டு மகிழும் விருப்பத்தினலேயே, சிவபெருமான் மதுரைநகரில் சவுந்தர பாண்டியன் என்றும், உமாதேவியார் தடாதகைப் பிராட்டி என்றும், முருகப் பெருமான் உக்கிரப் பெருவழுதி என்றும் தோன்றியருளி, ஒரு பெருங் குடும்பமாகத் தங்கி வாழ முற்படுவாராயினர்'' என்னும் கருத்து அமையுமாறு,

'தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகா தேவி என்றொரு பேர்
தரிக்க வந்ததுவும்; தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும்;
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும்; தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமை, யார் அறி
வார்''

எனப்பாடியருளி யிருத்தலும், நாம் பல்காற் பயின்றுணர்ந்து மகிழ்தற்குரியது.

(23) மாபெருந் தமிழ்ச்சைவச் சான்றோர் ஆகிய மாதவச் சிவஞான யோகிகள், தாம் இயற்றியருளிய தொல்காப்பியச் சூத்திர விருத்தியின்கண் ''தமிழ் மொழிப்புணர்ச்சிக் கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக் குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்

படா'' என்று விளக்கியிருத்தலும், இங்கு நாம் உணர்ந்து இன்புறற்பாலது.

(24) திருவிளையாடற்புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர், ''கூத்தப் பெருமான் தெற்கு நோக்கித் தன் திருநடனத்தைச் செய்தல், தென்றற்காற்றின் மென்மையினையும், செந்தமிழ் மொழியின் இன்பத்தினையும் நுகர்தற் பொருட்டேயாகும். தமிழின்பால் சிவபிரானுக்குள்ள ஈடுபாடு எல்லையற்றது. அதனாலேயே அப்பெருமான் சங்கப் புலவர்களுடன் கூடித் தமிழினை ஆராய்ந்து மகிழ்ந்தான்; இறையனார் என்னும் பெயர் கொண்டு சங்கப்புலவர்களின் தலைவனாக விளங்கி, சிவபெருமானே ஆராய்ந்து இன்புற்றதும், இலக்கணச் சிறப்பு வளம் மிக்கதும் ஆகிய தமிழ் மொழிக்கு, இலக்கண வரம்பில்லாத ஏனைய பிற சில மொழிகள் எவ்வாற்றாலேனும் ஈடாகுமோ? இறைவனைத் தூது போகச் செய்ததும், முதலையுண்ட பாலனை உயிர் பெற்று வருமாறு அழைத்ததும், என்பைப் பெண்ணுருவாக்கி உயிர்ப்பித்ததும், மறைகள் மூடிச்சென்றகதவினை மீளத் திறப்பித்ததும், கன்னித் தமிழ்மொழியே அன்றோ? இத்தகைய அரும்பெறற் செயல்களை அன்னிய மொழிகள் எவையேனும் எங்கேனும் ஆற்றியதுண்டோ?'' என்றெல்லாம் தமிழ் மொழியின் சிறப்பினைத் தகவுறப் புகழ்ந்து பாடிப் போற்றியருள்கின்றார்.

கண்ணு தற்பெருங் கடவுளும்
　　கழகமோடு அமர்ந்து,
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தஇப்
　　பசுந்தமிழ், ஏனை
மண்ணி டைச்சில இலக்கண
　　வரம்பிலா மொழிபோல்
எண்ணி டப்படக் கிடந்ததா
　　எண்ணவும் படுமோ?

தொண்டர் நாதனைத் தூதிடை
　　விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும்,
　　என்புபெண் ணுருவாக்
கண்ட தும், மறைக் கதவினைத்
　　திறந்ததும், கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ? மறுபுலச்
　　சொற்களோ? சாற்றீர்!

— திருவிளையாடற் புராணம்

(25) செந்தண்மை என்னும் சீவகாருணியக் கொள்கையினைக் கடைப்பிடித்துச், சத்திய சமரச சன்மார்க்க நெறியினைப் பரப்பியருளிய திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள், ''முதலையுண்ட மதலையை மீட்டு உயிர்த்தெழச் செய்த தமிழ்க்கலைக்கும், வடகலைக்கும் இடையேயுள்ள இயல்பு வேறுபாடு, பொன்மலைக்கும் அணு நிலைக்கும் இடையேயிருப்பது போன்றது'' என்னும் கருத்தமைய,

''இலைக்குளநீர் அழைத்ததனில்
　　இடங்கர்உற அழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர்
　　தழைப்ப அழைத் தருளியநின்
கலைக்கும்,வட கலையின்முதற்
　　கலைக்கும்உறு கணக்கு, உயர்பொன்
மலைக்கும்,அணு நிலைக்கும்உரு
　　வன்றெண்டப் பெருந்தகையே''

என அருளிச் செய்திருத்தல், சிந்தித்து அறிதற்குரியது. இது மட்டுமோ! இறைவன்பால் தாம் செய்து கொண்ட சத்தியப் பெரு விண்ணப்பம் என்னும் வேண்டுகோளில்,

''இடம்பத்தையும், ஆரவாரத்தையும்,
பிரயாசத்தையும், பெருமறைப்பையும்,
போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற
ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு
ஆசை செல்ல ஒட்டாது — பயிலுதற்கும்
அறிதற்கும் மிகவும் லேசுடைதாய்,
பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும்
இனிமையுடையதாய், சாகாக் கல்வியை
லேசில் அறிவிப்பதாய்த், திருவருள்
வலத்தாற் கிடைத்த தென்மொழி

ஒன்றனிடத்தே என் மனம் பற்றச் செய்து,
அத் தென்மொழியாற் பலவகைத்
தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்
தருளினீர்''

என்று எழுதியிருப்பனவும், இங்கு நாம் பெரிதும் ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்துகொளற்பாலது.

(26) பல நூறுயிரம் பாடல்களைப் பாடியிருப்பவரும், புலவர்புராணம் இயற்றியவரும், முருகன் அருள்பெற்ற பெருமுனிவரும் ஆகிய திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள், தமிழ் மொழியினை இகழ்ந்து பழித்த ஒருவனை மறுத்துத் தமிழின் தனிப்பெருமாட்சிமைகளும் தெய்விகநலங்களும் விளங்கப் பாடியருளிய தமிழலங்காரம் என்னும் அழகிய அரும்பெறற் கவிதைநூலால், அவ்வருட்பெருஞ் சான்றோர் தமிழின்பாற் கொண்டிருந்த ஆர்வமும் பற்றும், பக்தியும் தெற்றெனப் புலனுகும், நச்சினார்க்கினியர் (தொல். செய். 117), தமது தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் ''ஆரியம் நன்று; தமிழ் தீது'' என்றுரைத்தான் ஒருவனை, நக்கீரர் சாவவும் வாழவும் பாடிய செய்தியினைக் குறிப்பிட்டிருத்தலும், இங்கு நாம் உணர்தற்குரியது.

முடிவுரை :

இங்ஙனம், தொன்று தொட்டு வாழையடி வாழையாகத் தோன்றியருளிய சான்றோர்கள் அனைவரும், ஒருங்கினிது உளமுவந்து புகழ்ந்து போற்றியுள்ள செந்தமிழ்மொழியின் தெய்விக நலங்களை யுணர்ந்து, நாம் அனைவரும் அதனை ஏற்ற பெற்றி போற்றி, நலம்பலவும் எய்தி உய்ய முயலுவோமாக !

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

(7) தமிழக முதல்வருக்குப் பாராட்டு:

சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் சார்பில், 'டாக்டர்' பட்டம் பெற்ற மாண்புமிகு நம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு விழா, 27—10—71 மாலை, சென்னைப் பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் மிகவும் சிறப்புற நிகழ்ந்தது, விழாவுக்குச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுந்தரவடிவேலு தலைமை வகித்தார்.

ஆராய்ச்சித் துறை மாணவர் மா. செல்வராசன், எம். ஏ., வரவேற்புரை நிகழ்த்தினர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் பல்வேறு துறையைச் சார்ந்த ஆராய்ச்சி மாணவர்கள் சார்பில், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. டாக்டர் கலைஞருக்குத் திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் மூன்றினைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுந்தரவடிவேலு அளித்தார்.

கலைஞரைப் பாராட்டிப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு ஆராய்ச்சித்துறை மாணவர்கள் சார்பில், எம். கே. பாலசுப்பிரமணியம், தாமோதரன், பிரபாகரன் ஆகியோர் பேசினர். அரசியற்கலை மாணவர் சோமசுந்தரம் பாராட்டுக் கவிதை படித்தார். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சார்பில், டாக்டர் சண்முகசுந்தரம், டாக்டர் தா. ஏ. சண்முகம், திருக்குறள் ஆராய்ச்சிப் பேராசிரியர் திருநாவுக்கரசு, டாக்டர் கிருஷ்ணன், டாக்டர் ந. சஞ்சீவி, மத்தியத் திட்டத் துணையமைச்சர் மோகன்தாரியா, தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் ஆகியோர், கலைஞருக்கு வாழ்த்துரைத்தனர். இறுதியில் டாக்டர் கலைஞர் அவர்கள், நன்றி தெரிவித்துப் பேசினர்.

—ஆசிரியர்.

செய்தித் திரட்டு

பேரூர்க் கோயிலில் தமிழ் அருச்சனை

கோயமுத்தூர்ப் பேரூர்த் திரு. பட்டீசு வரசுவாமி கோயிலில், 24-6-53 அன்று தவத் திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமிழ் அர்ச்சனையை முன்பு துவக்கி வைத்தார்கள். இந்தப் பேரூர்க் கோவிலில் 1953-ல் அர்ச்சனை செய்யப்பட்ட தொகை ரூ. 9470/- அர்ச்சனை செய்தவர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 851. 18 ஆண்டுகளுக்குப் பிறகு 1971-ம் ஆண்டில் அர்ச்சனை செய்தவர்களின் தொகை 1 லட்சத்து 9 ஆயிரத்து 173.

திருத்தணிகைக் கோயில்வருவாய்

2) திருத்தணிகைச் சுப்பிரமணிய சுவாமி கோயிலின் இந்த ஆண்டு ஆடிக் கிருத்திகை வருவாய் ரூ. 3,84,300/- சென்ற ஆண்டில் (1970) ரூ. 3,08,000/- இந்த ஆண்டில் ஆவணிக் கிருத்திகையின் வருவாய் ரூ. 52,279-82. சென்ற ஆண்டு ஆவணிக் கிருத்திகையின் வருவாய் ரூ. 46,934-68.

கோயில் திருப்பணிகள்

3) 1971-ம் ஆண்டு அக்டோபர் ஒன்றும் தேதி முதல், 1972 அக்டோபர் ஒன்றும் தேதிக்குள் தமிழகத்தில் சென்னை, தஞ்சை, கோவை, மதுரை ஆகிய நான்கு பகுதிகளில் ரூ. 4 கோடி, 75 லட்சம் மதிப்பீடு உள்ள கோயில் திருப்பணிகள் தொடங்கப் பெற்றுள்ளன. இதற்காக ஓர் உதவிப் பொறியரும் இரண்டு இளநிலைப் பொறியர்களும் அரசு அனுமதித்துள்ளது. தஞ்சையில். 130 கோயில்கள் திருப்பணி செய்யப் பட்டியல் இடப்பட்டு முன்பே வேலை தொடங்கப்பட்டுள்ளது. அவற்றிற்காக ரூ. 1 கோடி 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னைக்கு 1 கோடியும், கோவைக்கு 1 கோடியும், மதுரைக்கு 1 கோடியும் 25 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன.

ஆயிரக்கால் மண்டபங்கள்

4) தமிழ் நாட்டில் ஆயிரக்கால் மண்டபங்கள் 8 கோயில்களில் இருக்கின்றன. தற்போது மதுரைக் கோயிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் மட்டும் கலைக்கூடம் அமைக்கப்பட்டுச் சிறந்த முறையில் விளங்கிவருகின்றது, அதுபோலவே திருவண்ணாமலை, திருவரங்கம், காஞ்சிபுரம் சிதம்பரம் திருநெல்வேலி திருவானைக்கா திருவாரூர் ஆகிய எஞ்சிய ஏழு கோயில்களில் உள்ள ஆயிரக்கால் மண்டபங்களிலும் கலைக்காட்சிக்கூடங்கள் விரைவில் அமைக்கப்பட இருக்கின்றன.

கலைஞருக்குத் "தமிழவேள்'' பட்டம்

சென்னையில் தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவையின் சார்பில், டாக்டர் பட்டம் பெற்ற நம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு விழாவும், இப்பேரவையின் சார்பில் டாக்டர் கலைஞருக்குத் 'தமிழவேள்' என்ற பட்டம் அளிப்பு விழாவும், 16—10—71 இரவு 7 மணிஅளவில் கலைவாணர் அரங்கில் நடைபெற்றன.

விழாவுக்குச் செட்டி நாட்டரசர் இராஜா சர் முத்தையா செட்டியார் தலைமை வகித்து முதல்வர் கலைஞருக்குப் பொன்னாடை போர்த்தினர். பேரவை இயக்குநர் டாக்டர் திரு. மெ. சுந்தரம் வரவேற்புரையாற்றினர்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. என். வி. என்., மாதவன், திரு. ராஜாராம், திரு. அன்பில் தருமலிங்கம், திரு. கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனர் கலைஞருக்குத் 'தமிழவேள்' என்ற சிறப்புப்பட்டத்தினை வழங்கினர்.

டாக்டர் மெ. சுந்தரம் எழுதிய கலைஞர் கவிதைத் திறனய்வு பற்றிய ஆங்கில நூலைத் தமிழக ஆளுநர் வெளியிட அதனைத் தேவநேயப் பாவாணர் பெற்றுக் கொண்டார்.

கவிதைத் திறனய்வுத் தமிழ் நூலை மால்கம் ஆதிசேசய்யா வெளியிட்டார். டாக்டர் மு. வ. அதனைப் பெற்றுக்கொண்டார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் தேவநேயப் பாவாணருக்குப் பொன்னடை போர்த்திச் சிறப்பித்தார்.

முதல்வர் கலைஞரைப் பாராட்டி அண்ணமலைப் பல்கலைக். கழகத் தமிழ்த் துறைத் தலைவர்: டாக்டர் வ.சுப.மாணிக்கம், திருப்பதித் திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், திருவனந்தபுரம்கேரளப்பல்கலைக்கழகத்தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் எஸ். டி. சுப்பிரமணியம்—சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சி பாலசுப்பிரமணியம், பேராசிரியர் தேவநேயப்பாவாணர், டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, டாக்டர் க.சங்கரராசு, பெங்களூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் ஜி. வேங்கடாசலம், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், மெ. செ. மெய்யப்பன் ஆகியோர் பாராட்டிப்பேசினர்.

மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தமிழண்ணல்—கவிஞர் அப்துல் ரகுமான்—நாக. முத்தையா ஆகியோர் பாமாலை பாடினர்.

பாராட்டு நன்றிதெரிவித்து முதல்வர் கலைஞர் உரையாற்றினர். டாக்டர் மெ. சுந்தரம் நன்றி கூறினர்.

இவ்விழாவில் கலைவாணர் அரங்கமே நிரம்பி வழியத்தக்க வண்ணம் பொதுமக்கள் திரளாகக் கூடியிருந்தனர்.

—ஆசிரியர்

ஐப்பசிச் சதய விழா

(வாழ்த்துச் செய்தி)

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A ,B.L.,I.A.S

அறநிலைய ஆணையர்

சோழப் பேரரசர்களில், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றிப் பல்லாற்றுனும் சிறந் தோங்கித் திகழ்ந்திருந்தவன், இராச ராச சோழன். சுந்தரசோழன் என்னும் இரண்டாம் பராந்தக மன்னனுக்கும், வானவன் மாதேவியாருக்கும், மைந்தனுகத் தோன்றிய இவ்வரசனின் இயற்பெயர், அருண்மொழி என்பது.

திருக்கோவலூரிலிள்ள ஒரு கல்வெட்டு, இவ்வரசனைச் ''செந்திரு மடந்தைமன். ஸ்ரீஇராச ராசன், இந்திரசமானன், இராச சர்வஞ்ஞன் என்னும் புலி'' எனப் புகழ்ந்துரைத்துப் போற்று கின்றது. இவ்வரசனுக்குக் கேரளாந்தகன், சிங்களாந்தகன், பாண்டிய குலாசனி, தெலிங்க குலகாலன், மும்முடிச் சோழன், செயங்கொண்ட சோழன் எனப்பல சிறப்புப் பெயர்கள் உண்டு. இவற்றால், அவனது வீரத் திறனும், வெற்றிப் பண்பும் விளங்கும். சிவபாதசேகரன், பண்டித சோழன், திருமுறைகண்ட சோழன் முதலிய சிறப்புப் பெயர்கள், இவனது சிறந்த சிவபக்தி யையும், செந்தமிழ்ப் புலமையினையும், திருமுறைப் பற்றையும் விளக்குவனவாகும்.

இப்பேரரசனின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் ஈடும் இணையும் அற்ற சிறப்பு எய்தி விளங்கியது. தமிழ் நாகரிகம் பண்பாடு கலை முதலியன, கடல்கடந்த பிற நாடுகளிலும் சென்று பரவிப் பெருமையுற்றன. இப்பேரரசன் செய்த தொண்டுகளிலெல்லாம் மிகவும் சிறந்ததாய் ஓங்கித் திகழ்வது, தஞ்சை மாநகரில் எடுப்பித்த இராச ராசேசுவரம் என்னும் தஞ்சைப் பெருவு டையார் கோயிலேயாகும். தென்னிந்தியக் கோயிற் கட்டிடக் கலை வரலாற்றில், இராசராச சோழன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஒப்புயர்பற்றுத் திகழ்கின்றது. அது நம் தமிழ்நாட்டின் தலைசிறந்த கலை நாகரிகப் பண்பாடுகளின் சின்னமாகவும், சிகரமாகவும் எழில் மிக்கு விளங்கிவருகின்றது. இப் பெருங்கோயிலைக் காணும்போது, இராசராச சோழனின் இணையற்ற பல சிறப்புகளை நினைத்து நினைத்து எவரும் வியவாமல் இருத்தல் இயலாது.

உலக வரலாற்றிலேயே இவனுக்கு நிகராகச் சொல்லத் தகுந்த அரசர்கள், ஒரு சிலரே இருந்திருத்தல் கூடும். இப்பேரரசன் ஐப்பசித் திங்களில் சதய நாளில் தோன்றியருளினன் என்பது, திருநந்திக்கரை என்னும் இடத்திலுள்ள ஒரு கல்வெட்டால் புலனுகின்றது. தான் பிறந்த ஐப்பசிச் சதய நாளில், இறைவனுக்கு விழாக் கொண்டாட, இவ்வரசன் நிபந்தங்கள் அமைத்த தனை, அக் கல்வெட்டு அறிவிக்கின்றது. சேரநாட்டை வெற்றி கொண்டபோது, அங்கும் தான் பிறந்த ஐப்பசிச் சதய நாளில், இறைவனுக்குத் திருவிழாக் கொண்டாட, இவ்வரசன் ஏற்பாடு கள் செய்தருளினுன் என்பது, ''சதயநாள் விழா உதியர் மண்டலம் தன்னில் வைத்தவன்'' எனவரும் கலிங்கத்துப் பரணிப் பாடலால் தெளியப்படுகின்றது.

இராசராச சோழனின் ஐப்பசிச் சதய நாள்விழா, வழக்கம் போல் இவ்வாண்டும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், சிறப்புற நடைபெற இருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். விழா நன்கினிது நிகழவும், விழாமலர் சிறப்புற அமையவும், தஞ்சைப் பெருவு டையாரின் திருவடிகளை இறைஞ்சி, விழாவுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—x—

இராசராசனின் இணையற்ற தியாகம்*

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

தமிழகத்தில் ஆட்சி செலுத்திய பேரரசர்கள் பலருள், முதலாம் இராச ராச சோழன் மிகவும் பெருஞ் சிறப்பு வாய்ந்தவன். அப் பேரரசன் இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தர சோழனுக்கும் வானவன்மாதேவி என்னும் அம்மையாருக்கும் இரண்டாம் மைந்தனாகத் தோன்றியவன். அவனது இயற் பெயர் அருண்மொழி என்பது.

''சுந்தரசோழனுக்கு மைந்தனாக அருண்மொழி தோன்றினான். அழகு என்னும் ஆரணங்கு, இவனது உடல் உறுப்புகளை அடைந்தாள். இவன் அவ்வணங்கினைத் தன் நீண்ட இரு கைகளில் தாங்கினான். அக் கைகளில் சங்கும் சக்கரமும், ரேகை வடிவில் திகழ்ந்தன. திருமாலின் மறு தோற்றமாகவே அவன் திகழ்ந்தமையை இவ் அடையாளங்கள் இனிது உணர்த்துகின்றன'';

''அருண்மொழி வர்மனின் தோற்றம், ஒரு புதிய சந்திரனின் உதயம் போல அமைந்தது. அவன் தோன்றியதும் இரு புறத்தும் பெரிய தூய்மையான ஒளி ஒரு பெரும் மண்டலமாகத் தோன்றியது. வானத்துச் சந்திரன் ஒளி புறம் ஒளியாகவும், மற்றொரு புறம் இருளாகவும் இருப்பா . ஆனால் அருண்மொழி வர்மனாகிய சந்திரனோ, தாய்வழி தந்தைவழி என்னும் இருபுறத்தும் ஒளி மயமாகத் திகழ்கின்றான். இச் சந்திரனின் உதயம் கண்டு மக்களின் கண்களெல்லாம் மலர்ந்தன; மனங்களெல்லாம் மகிழ்ந்தன! இதற்கு முன் கண்டிராத ஒரு பெரும் முழு நிலவாக அருண்மொழி வர்மன் விளங்கினான்''

''அருண்மொழி வர்மன் தோன்றிய போது, ஒரு மாபெரும் வேந்தன் இவ்வுலகில் தோன்றி விட்டான். இனி அவன் தன் தோள் வலியால் இவ்வுலகின் சுமையை ஏற்றுத் தூங்கிக் கொள்வான்; அதனால் இனி ஆதிசேடனாகிய நம் கணவர் தாங்கும் பூபாரமாகிய உலகச்சுமை பெரிதும் குறைந்துபோகும் என்று, ஆதிசேடனின் மனைவியராகிய நாகப் பெண் மணிகளெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்துக் களி நடம் புரிந்தனர்;''

''அருண்மொழி வர்மன் கருவிலேயே திருவுடையவனாகப்பிறந்தான். ஒரு பேரரசனுக்குரிய உறுப்பிலக்கணங்கள் அனைத்தும், இவன் பால் சிறப்புறப் பெரிதும் அமைந்து திகழ்

---

* தஞ்சைப் பெரிய கோயிலில் நிகழும் இராசராச சோழனின் சதய நாள்விழாவினை முன்னிட்டு, இக்கட்டுரை வெளியிடப் பெறுகின்றது. (30, 31-10-71)

ஆசிரியர்.

கின்றன. இவனது இயலும் செயலும் எல்லாம் சோழநாட்டு மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு, அவற்றைக் களிதுளும்பச் செய்தன'' என்றெல்லாம் திருவாலங்காட்டுச் செப்பேடுகள். இராசராசனின் இனிய பல சிறப்புக்களைப் புகழ்ந்து போற்றுகின்றன.

இராசராசன் இளைஞனாக இருக்கும் போதே, அவனது தந்தையாகிய இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரசோழன், இறந்து விட்டார். அவர் இறந்த துயரம் தாங்காமல், இராசராசனின் தாயார் ஆகிய வானவன் மாதேவியாரும் உடன்கட்டை ஏறி உயிர் நீத்தாள் என்பது, திருக்கோவலூர்க் கல்வெட்டினால் அறியப் பெறுகின்றது. இராசராச சோழனின் தமையனாகிய ஆதித்த கரிகாலன் என்பவன், வீரநாராயணபுரத்தைச் சேர்ந்த யாரோ ஒரு சிலரின் சூழ்ச்சியால் கொல்லப் பட்டான் என்று, உடையார் குடிக் கல்வெட்டினால் உணரப்படுகின்றது. தந்தையையும் தாயையும் தமையனையும் இழந்த நிலையில், இளைஞனாக இருந்த இராசராச சோழனை, மிகவும் அன்பு காட்டிச் சிவஞான கண்டராதித்த தேவரின் மனைவியாரகிய, செம்பியன் மாதேவியார் மிகவும் சீராட்டிப் பாராட்டி வளர்த்தருளினர், இவருடன், இராசராசனை வளர்த்த பெருமை, இராசராசனின் தமக்கையாகிய குந்தவைப் பிராட்டியார்க்கும் உண்டு.

தன் தந்தையாராகிய சுந்தரசோழரும், தமையனாகிய ஆதித்த கரிகால் சோழனும் மறைந்ததனால், அருண்மொழிவர்மன் என்னும் இராசராச சோழனையே, சோழப் பேரரசை ஏற்று ஆளும்படி மக்கள் அனைவரும் வேண்டினர். அறிவும் ஆற்றலும் ஆட்சித்திறனும் போன்ற பற்பல அருந்தகுதிகள் பலவும் நிறைந்து விளங்கி, மக்கள் அனைவரும் தன்னையே அரசன் ஆகும்படி மிகவும் அன்புடன் வற்புறுத்தி வேண்டிக் கொண்டபோதும், மிக எளிதாகவும் இயல்பாகவும் அரச பதவியில் தான் அமரக் கூடிய வாய்ப்பிருந்தும், இராசராசன் அதனை அடைய விரும்பாமல் மறுத்தான். தன்னிலும் வயதில் முதிர்ந்த தனது சிறிய தந்தையாராகிய மதுராந்தக உத்தம சோழரே; மன்னராக முடிசூடி நாட்டை ஆள வேண்டும் என்று விரும்பி, அவருக்கே தனது உரிமையைத் தானே வலிந்து முற்போந்து மிக்க பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுத்தான்; மேலும் அவர் உள்ளவரையில், சோழ நாட்டு அரச பதவியைத் தான் தன் மனத்தினாலும் நினைக்கமாட்டேன் என்று சூளுரைத்தான்; அவரை முடிசூட்டி அராசராக்கி, அவர் கீழ்த்தான் இளவரசனாகப் பதினைந்து ஆண்டுகள் பொறுப்பாக இருந்து பணிபுரிந்து, சோழப் பேரரசினைப் பல்லாற்றானும் வளர்த்துச் சிறப்போங்கச் செய்து வந்தான். மதுராந்தக உத்தம சோழர், மாட்சி மிகப் பதினைந்து ஆண்டு ஆட்சி செலுத்திக் கி. பி. 985 இல் மறைந்த பிறகே இராசராசன் அரியணை ஏறி ஆட்சிப் பொறுப் பேற்றான்.

இராசராசனின் இத்தகைய ஒப்பற்ற நேர்மைத் திறமும், மூத்தோர்க்கு மதிப்பளித்து ஒழுகும் மாட்சிமையும், அவரவர் பாடறிந்து போற்றும் பண்பாடும். பதவி விருப்பற்ற மனப்பாங்கும், விட்டுக்கொடுத்து தவித்தியாகம் புரிய வல்ல மேதகவும், பிறவும், உலக வரலாற்றிலேயே வேறு எங்கும் காணப்படாத சீரும் சிறப்பும் மிக்க ஓர் அரும்பெரும் செயலாகும். உலக வரலாற்று ஏடுகளில் ஒரு சிறிது ஆராய்ந்தாலும், அரச பதவியைக் கைப்பற்றுவதற்காக, எத்தனையோ பற்பல சூழ்ச்சிகளும் கொலைகளும் ஏராளமாக நடத்திருப்பதைக் காணலாம்.

உரோம நாட்டு வரலாற்றில் அகஸ்டஸ் சீசர் என்பவனுக்குப் பிறகு எத்தனையோ பல கொடுங்கோலர்கள் தோன்றினர். மக்களுக்குக் கொடுமை புரிதலில், அவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டு விஞ்சி நின்றனர்; கிளாடியஸ், தன் மனைவி மெசாலினவைக் கொன்றான்; நீரோ தன் தாயாகிய அக்ரிபானவைக் கொலை செய்தான். கம்மோடஸ் தன் சகோதரியையும் மனைவியையும் வதைத்தான். காரகேலா தன் சகோதரனின் உயிரைப் போக்கினன். அரச குடும்பங்களில் இத்தகைய கொடுஞ் செயல்கள் நிகழ்வது இயல்பாக இருந்து வந்தது. முதல் மூன்று நூற்றாண்டுகளில் உரோம நாட்டை அரசு செலுத்திய அரசர்கள் ஐம்பதின்மரில், முப்பத்தேழு பேர் நஞ்சூட்டப்பெற்றோ, மறைந்

திருந்து வாளால் தாக்கப்பெற்றே, குரல்வளை நெரிக்கப் பெற்றே, தலை துண்டிக்கப்பெற்றே அல்லது தற்கொலை புரிந்து கொண்டோதான் இறந்தொழிந்தனர். இவர்கள் அனைவருமே தம்முடைய உறவினர் மனைவியர் காதலியர் வீரர் காவலர் போன்றவர்களின் சூழ்ச்சிகளினாலேயே இத்தகைய படுகொலைகளுக்கு ஆளாயினர். உரோம வரலாற்றில் இத்தகைய கொடிய பல நிகழ்ச்சிகளை மிகவும் ஏராளமாகக் காணலாம்*.

இங்ஙனமே நம் இந்திய நாட்டிலும் எத்தனையே பல செய்திகளைக் குறிப்பிடலாம். ஜகாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப், போன்றவர்களின் வரலாற்றில், இத்தகைய கொடிய பயங்கர நிகழ்ச்சிகள் பல நடந்தமையினை வரலாற்று ஏடுகள் விரிவாகத் தெரிவிக்கின்றன.

இங்ஙனமெல்லாம் இல்லாமல், இராசராச சோழன் தானே விரும்பி முன்வந்து, தனது சிறிய தந்தைக்குப் பெரிதும் மதிப்பளித்து, மன நிறைவுடன் விரும்பி அவருக்கு அரச உரிமையை நல்கி, அவரை முடிசூடச் செய்வதற்காக ஆற்றியுள்ள அரும் பெரும் தியாகப் பண்பின் திறம், நினைத்தொறும் நினைத்தொறும் நம்மனோர்க்கு வியப்பை விளைவிப்பதாகும். இராசராசனுக்குரிய எத்தனையோ பல எண்ணில்லாத பல சிறப்புகளுள், மிகவும் தலைசிறந்த ஒன்றாக, அவனது இணையற்ற இந்தத் தியாக உணர்வின் திறம், நாம் பெரிதும் நயந்தும் வியந்தும் போற்றி மகிழற்பாலதாகும். வாழ்க இராச ராசனின் புகழ்:

ஆற்றலும், அறிவும், ஆட்சிநற் றிறனும்
அருங்கலைப் பயிற்சியும், அழகார்
தோற்றமும், எல்லாம் துவன்றிடப் பெற்றும்,
உத்தமச் சோழர்தம் பொருட்டால்
ஏற்றிலன், அளித்தான் அரசினை; இராச
ராசனும் எழிற் பெரு வேந்தன்:
போற்றுதற் குரிய புகழ்ப்பெருந் தியாகம்
புரிந்தனன்; அவன் புகழ் வாழ்க!

— ந. ரா. முருகவேள்.

---

*"After Augustus came absolutism. Despot succeeded despot, each rivaling each in cruelty. Claudius had his wife, Messalina, murdered; Nero, his mother, Agrippina; Commodus, his sister and his wife; Caracalla, his brother. such gentle attentions appear to have been the rule in the imperial families. To make up for this, out of the fifty members who occupied the throne in the first three centuries of the regime thirty-seven died violent deaths-were poisoned, beheaded, stabbed, had their throats cut, or committed suicide. They were the victims of their relations, their wives, their mistresses, their soldiers, or themselves. The Roman Principate was to offer an inexhaustible supply of subjects for the tragic writers of future centuries."

—Rene Sedillot,
The History of the World, p.75.

சென்ன பட்டணத்துச் சட்டம்

MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri A. S. GNANASAMBANDAM Translation Dept.

—O—

(முற்றொடர்ச்சி)

(23) "சட்டப்படி இணைக்கப்படாத தேவஸ்வாம்கள்" என்பது, திருவாங்கூர்—கொச்சி, மதஸ்தாபனங்களைக் குறித்த 1960-ம் ஆண்டு சட்டத்தின் (திருவாங்கூர்—கொச்சி 1950 ஆண்டு 15-வது சட்டம்) II -வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள தேவஸ்வாம்கள் எனப் பொருள்படும்.

7. ஆலோசனைக் குழுவின் அமைப்பு :—(1) அரசாங்கத்தார் சென்னை மாநிலத்திற்காக, ஆலோசனைக்குழு என அழைக்கப்படும் ஒரு குழுவை அமைக்கலாம். அதில் அடியிற்கண்டவர்கள் அடங்குவார்கள் :—

(i) இச் சட்டத்தின் பரிபாலனத்திற்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் அவர்கள் உத்தியோக முறைமையில் தலைவராயிருக்க வேண்டும்.

(ii) இந்து அறநிலையப்பாதுகாப்புத்துறையின் பொறுப்பு வகிக்கும் அரசாங்கச் செயலாளர்—உத்தியோக முறைமையில்,

(iii) ஆணையர் உத்தியோக முறைமையில்,

(iv) அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களும் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களுமான உத்தியோக முறைமையில்லாத பன்னிருவர்.

(2) (1) உட்பிரிவின் (ii) பகுதியில் குறிப்பிட்டுள்ள அரசாங்கச் செயலாளர், அல்லது அரசாங்கத்தாரால் இது விஷயத்திற்காக அப்போதைக்கப்போது நியமிக்கப்படக்கூடிய இதர அதிகாரி ஆலோசனைக் குழுவின் செயலாளராய் இருக்கவேண்டும்.

(3) (1) உட்பிரிவின் (iv) பகுதியில் குறிப்பிட்டுள்ள அங்கத்தினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் அல்லது அரசாங்கத்தார் நிச்சயிக்கக்கூடிய அத்தகைய குறுகிய கால அளவாகும்.

(4) ஆலோசனைக் குழுவின் அலுவல்கள் அடியிற்கண்டவையாகும்.

(a) நிர்ணயிக்கக் கூடியபடியுள்ள விஷயங்கள் சம்பந்தமாக அரசாங்கத்தாருக்குச் சிபாரிசுகள் செய்வது, மேலும்,

(b) அரசாங்கத்தார் குழுவினரிடம் குறிப்பிடும் விஷயங்கள் சம்பந்தமாய் அரசாங்கத்தாருக்கு ஆலோசனை கூறுவது.

(5) ஆலோசனைக் குழுவின் அங்கத்தினர்களிடையே ஒரு அபிப்பிராய பேதம் எழுந்தால், வந்திருக்கும் பெரும்பான்மை அங்கத்தினர்களின் தீர்மானமும் வாக்கெடுப்பும் மேலோங்கும் ;

ஆனல், அவர்களுடைய அபிப்பிராயம் சமமாக இருந்தால் தலைவருக்கு ஒரு இரண்டாவது அல்லது நிர்ணய வாக்கு ஒன்று உண்டு; அவர் அதைப் பயன்படுத்தலாம்.

(6) (a) (1) உட்பிரிவின் (iv) பகுதியில் குறிப்பிட்டுள்ள ஓர் அங்கத்தினர் எந்த நேரத்திலும், அரசாங்கத்தாருக்கு எழுதிய அறிக்கை கொடுப்பதன் மூலம் தமது பதவியை ராஜிநாமா செய்யலாம்; ஆனல் அவருக்குப் பின் ஒருவரை நியமனம் செய்யும் வரையில் அவர் தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும்.

(b) (2) பகுதியின்படி ஓர் அங்கத்தினரின் ராஜிநாமாவினல் அல்லது மற்றப்படி உண்டான ஒரு தற்காலிகக் காலி இடம் புதிதாகச் செய்யப்படும் நியமனத்தினல் நிரப்பப்பட வேண்டும்.

அத்தியாயம் II

ஆணையரும் மேல் விசாரணை செய்கிற இதர—அதிகாரிகளும்.

8. இச்சட்டத்தின்படிக்கான அதிகாரிகள்; இச்சட்டத்தின்படி அடியிற்கண்ட வகுப்புகளைச் சேர்ந்த அதிகாரிகளிருக்க வேண்டும்;

(a) ஆணையர்;

(b) துணை ஆணையர்கள்;

(c) உதவி ஆணையர்கள்;

(d) பிராந்தியக் குழுக்கள்.

9. ஆணையர் முதலியவர்களை அரசாங்கத்தார் நியமிக்க வேண்டுமென்பது;—(1) அரசாங்கத்தார் ஆணையரையும், தங்களுக்குத் தகுதியாகத் தோன்றும் எண்ணிக்கையுள்ள துணை ஆணையர்களையும், உதவி ஆணையர்களையும் நியமிக்க வேண்டும்.

(2) (a) சென்னை மாநில உயர்நீதித் துறைப்பணி அல்லது வேறொரு பணியைச் சேர்ந்த அங்கத்தினரை மாற்றுவதன்பேரில் அல்லது நேரடியாக வேலைக்குச் சேர்ப்பதன் பேரில் ஆணையரின் பதவிக்கு நியமனம் செய்யப்படவேண்டும்.

(b) சென்னை நீதித்துறைப்பணி அல்லது யாதொரு இதர பணியைச் சேர்ந்த அங்கத்தினர்களை மாற்றுவதின் பேரில் அல்லது நேரடியாக வேலைக்குச் சேர்த்துக்கொள்வதன் பேரில் துணை ஆணையரின் பதவிக்கு நியமனம் செய்யப்படவேண்டும்.

(c) ஆணையரின் பதவி சென்னை மாநில உயர்நீதித் துறைப்பணி அங்கத்தினர் ஒருவரால் வகிக்கப்படாத விஷயத்தில், ஒரு துணை ஆணையர் பதவியாவது ஷ சென்னை மாநில நீதித்துறைப்பணி அங்கத்தினர் வகிக்க வேண்டும்.

10. ஆணையர் முதலானேர் இந்துக்களாயிருக்க வேண்டுமென்பது:—ஆணையரும் பிரதி துணை ஆணையரும் அல்லது ஒவ்வொரு உதவி ஆணையரும், பிரதி துணை ஆணையரும் அல்லது ஒவ்வொரு உதவி ஆணையரும், இச்சட்டத்தின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட மற்ற உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர் ஒவ்வொருவரும், யாரால் நியமிக்கப்பட்டிருந்தாலும்சரி, இந்துமதத்தைத் தழுவியிருக்கிற ஒருவராயிருக்க வேண்டும். மேலும், அவர் அம் மதத்தைத் தழுவியிராமற் போய்விட்டால், அவர் அவ்வுத்தியோகம் வகிப்பது நின்று போகும்.

11. ஆணையர் தனி நபர்கொண்ட கார்ப்பொரேஷனக இருக்க வேண்டுமென்பது:—ஆணையர், ஒரு தனிநபர்கொண்ட கார்ப்பொரேஷனகை இருக்கவேண்டும். மேலும், அவருக்கு நிரந்தரமான வாரிசுரிமையும், பொதுவான முத்திரையும் இருப்பதோடு, ஷ கார்ப்பொரேஷன் பெயரில் வழக்குத் தொடரவும் தொடரப் பெறவும் வேண்டும்.

12. ஆணையர் முதலியவர்கள் அரசாங்கத்தின் ஊழியர்களாயிருக்க வேண்டுமென்பது:—(1) இச்சட்டத்தின் காரியங்களுக்காக, வேலைக்கமர்த்தப்பட்ட ஆணையர், துணைஆணையர்கள், உதவி ஆணையர்கள், (அறநிலையங்களின் நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட), இதர உத்தி

148691

யோகஸ்தர்கள், ஊழியர்கள் இவர்கள் அரசாங்கத்தாரின் ஊழியர்களாயிருக்கவேண்டும்.

அவர்களுடைய சம்பளங்கள், வர்த்தனைகள், பென்ஷன்கள், இதர உத்தியோகங்களும், மாநிலத்தின் ஒருங்கு திரட்டப்பட்ட நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும். பிராந்தியக் குழுக்களுக்கு ஏற்பட்ட 93-வது பிரிவில் குறிப்பிட்டுள்ளவை யல்லாத மற்ற மதிப்புகளும், கட்டணங்களும், செலவுகளும், மத ஸ்தாபனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான செலவுகளும்கூட மாநிலத்தின் ஒருங்கு திரட்டப்பட்ட நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

(2) (a) (1) உட்பிரிவின்படி அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட தொகைகளை ஆணையர், சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புப் பரிபாலன நிதியிலிருந்து அரசாங்கத்தாருக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

(b) அற நிலையங்களின் நிர்வாக அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம், படிகள், பென்ஷன், இதர சம்பளம் ஆகியவற்றை ஆணையர் சம்பந்தப்பட்ட அறநிலையங்களிலிருந்து வசூலித்து, அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையை (a) பகுதியில் சொல்லப்பட்ட நிதிக்கு வரவு வைக்கவேண்டும்.

(c) (i) இச்சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு பணிபுரிந்த அத்தேதியன்றோ அதற்குப் பிறகோ வேலையிலிருந்து ஓய்வு பெறுகிற நிர்வாக அலுவலருக்குக் கொடுக்கப்படத்தக்க பென்ஷன் அல்லது இதர ஊதியத்தின் காரியத்திற்காக, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஷை அலுவலரின் சேவையை ஷை தேதிக்கு முன்பிருந்து கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(ii) இச்சட்டத்தின் தொடக்கத்திற்கு முன் (i) சொல்லப்பட்டுள்ள நிர்வாக அலுவலரின் சேவைக்காகக் கொடுக்கப்படத்தக்க பென்ஷன் அல்லது இதர ஊதியத்தின் பகுதியைக்கூட ஆணையர் சம்பந்தப்பட்ட மத ஸ்தாபனங்களிலிருந்து வசூலிக்கலாம்.

13. துணை ஆணையர்களுக்கு அதிகாரம் முதலியவற்றைப் பிரித்துக் கொடுப்பது:— (1) துணை ஆணையர்கள் ஒருவருக்கு மேற்பட்டவர்களாயிருந்தால் இச்சட்டத்தின்படியாவது அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் படியாவது துணை ஆணையர் என்னும் முறைமையில் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களையும், விதிக்கப்பட்டிருக்கின்ற கடமைகளையும் ஒரு துணை ஆணையர் எந்தப் பிரதேசத்துக்குள் முறையே செலுத்தவேண்டும் அல்லது செய்யவேண்டுமென்பதை, அரசாங்கத்தாரின் சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, ஆணையர் குறிப்பிடவேண்டும்.

(2) இந்த மாநிலத்திலுள்ள யாதொரு பிரதேச விஷயமாய் அல்லது யாதொரு வகை அல்லது தொகுதியைச் சேர்ந்த நிலையங்கள் விஷயமாய் அல்லது அதிலிருக்கிற ஒரு பிரதேச விஷயமாய் (உதவி ஆணையர் ஒருவருக்கு உள்ளவையும் 14-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட விலக்கு நிபந்தனையின்படி ஆணையரால் செலுத்தப்படக்கூடியவையுமாள அதிகாரங்களும் கடமைகளும் உட்பட ஆனால் 21, 22, 46, 47, 59, 69, 72 பிரிவுகள் அல்லது 92.வது பிரிவின் (2) உட்பிரிவு ஆகியவற்றின்படி ஆணையர்களுக்குள்ள அதிகாரங்களும் கடமைகளும் நீங்கலாக) இச்சட்டத்தின்படியாவது அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படியாவது ஆணையருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களில் அல்லது விதிக்கப்பட்டிருக்கிற கடமைகளில் எதையாகிலும் அவர், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய் அரசாங்கத்தார் ஏற்படுத்தக்கூடிய வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டும், பிரித்துக்கொடுப்பதற்கான உத்தரவில் குறிப்பிடக்கூடிய நிர்ப்பந்தங்களும் திட்டங்களும் எவையேனுமிருந்தால் அவைகளுக்குங்கூட உட்பட்டும், துணை ஆணையர் ஒருவருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

— தொடரும்.



தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்கள் சங்கமாநாட்டில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B.A.,B.L.I.A.S. அவர்கள் உரைநிகழ்த்துதல்.

அறநிலைய ஆணையர் அவர்களுடன் சங்கத்தின் செயலாளர்.



பெண்ணுகடம் பிரளயகாலேசுவரர் கோயிலின் இராசகோபுரத் திருப்பணித் துவக்க விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள்

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34. Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras-3. Editor : N. R. Murugavell, M.A., M.O.L.